# தென்மொழி

## பிறந்தநாள் நினைவிலோர் பெருமையும் இல்லை!

திறந்தநல் மனத்தொடு தெரிவிக் கின்றேன்,
    தீந்தமிழ் மொழி, இனம், நாடு
சிறந்துசீர் விளங்குநாள் சிறந்தநாள் எனக்கு!
    சிதைவுறும் நாளெலாம் தீநாள்!
பிறந்தநாள் நினைவிலோர் பெருமையும் இல்லை!
    பிறந்துவாழ் நோக்கமே பெரிது!
மறந்தநம் மொழியையும் மடிந்தநம் இனத்தையும்
    மலர்த்தி, நம் நிலம்பெறல் வாழ்வே!

(வேறு)

முன்னே போய்க்கொண் டிருக்கின் றேன்; ஒரு
    முழமே சறுக்கி விரற்கடை ஏறினும்
பின்னே திரும்பி, நான் பார்த்திடேன்; உடல்தரும்
    பிணிகளைத் தடைகளைப் பொருட்டென
                                        எண்ணிடேன்!
என்னேர் உயிரினை இழப்பினும் தயங்கிடேன்;
    ஏற்றுள கொள்கையே பெரிதென் றியங்குவேன்!
அன்னை மொழி, இனம், நாட்டினை எதிரிகள்
    ஆள்வதை மீட்டிடும் வரை, விழி உறங்கிடேன்!

இம்மா நிலந்தனில் எண்ணிலா ஏழைகள்,
    ஏற்றத் தாழ்வுகள் எங்கணும் இருக்கையில்
சும்மா இருந்திட மனம்வர வில்லையே!
    சொகுசாய் வாழவும் அறிவிசைந் தில்லையே!
எம்மா நிலத்தையும் இனத்தையும் மொழியையும்
    எத்தனை முயற்சிகள் செய்தே ஆயினும்—
வெம்மாப் பெரும்படை நடத்தியே ஆயினும்—
    விடுதலை செய்வதே உலகில், என் வேலையாம்!

ஆசிரியர்
**பெருஞ்சித்திரனார்**

சுவடி : 27
ஓலை : 5

விலை :
உருபா: 3 00

# நமக்கு வந்த மடல்கள்.

**O : 1552:** உயரிய மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியீர்! ஏழு மாதச் சிறை வாழ்க்கைக்குப் பின் பிணையலில் விடுதலையாகியுள்ளீர்கள் எனத் தெரிய வந்தேன். நீங்கள் சிறையில் அடைபட்டிருந்தீர்கள் என்றால், தமிழ் சிறைப்பட்டிருந்தது என்றே பொருள்.

தமிழால் இன்று நிரம்பப் பேர்கள் வாழ்கிறார்கள். ஆனால் தமிழுக்காக வாழ்கிறவர்கள் மிகக் குறைவு. அக்குறைவில் நீங்கள் முதன்மை பெறு(வகிக்)கிறீர்கள்.

நான் கழிந்த சூலையில் சென்னைக்கு வந்திருந்தேன். சிறைக்கு வந்து உங்களைப் பார்த்து உணர்வு கொள்ள விரும்பினேன். ஆனால் பிறர்(அந்நியர்) அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிந்தேன். எனினும் நண்பர் கலசம் அவர்களுடன் உங்கள் அச்சகம் வந்து உங்கள் துணைவியாரைக் கண்டு உங்களைப் பற்றி உசாவிக் கொண்டேன்.

உங்கள் ஈக(தியாக)த் தொடர்ச்சிக்கு என் வீர வாழ்த்துக்கள். அடுத்த மாதம் நான் சென்னைக்கு வருகிறேன். நேரில் சந்திக்கிறேன். என்றுமுங்கள் —பொ. சு. மணி,

ஆசிரியர், 'கன்னியாகுமரி' நாகர்கோவில்-1.

**O : 1553:** பேரன்புடையீர், வணக்கம். தாங்கள் சிறையிலிருந்து பிணையலில் விடுதலையானது குறித்துப் பெருமகிழ்ச்சியுற்றேன். ஆயினும் உடன் வந்து பார்க்க முடியாமைக்கு மிகவும் வருந்துகிறேன். குடல்(டைபாய்டு) காய்ச்சலினால் உடல்நிலை இன்னும் முழுமையாகத் தேறவில்லை. விரைவில் சென்னை வர முயல்கிறேன்.

தங்களின் விடுதலைக்காகப் 'புரட்சிகர இளைஞர் முன்னணி' அமைப்பினர் தமிழ்நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்களும் விளக்கக் கூட்டங்களும் நடத்தியும், துண்டறிக்கைகள் சுவரொட்டிகள் மூலம் கருத்துகள் பரப்பியும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர். அவ்வமைப்பின் அனைவர்க்கும் நம் நன்றியையும் வாழ்த்துகளையும் உரித்தாக்குவோம்.

ஆனால் நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' ஒரு சிறு கூட்டத்தையோ, சுவரொட்டி வழி கருத்துப் பரப்பலையோ நடத்த முடியவில்லை. இதற்காக மிகவும் வருந்துகிறேன். அடித்தளத்து மக்களிடம் நாம் காலூன்றாமல், நம் கொள்கை நிறைவேறப் போவதில்லை. தற்போது 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' நூல் வெளிவருவதில் அதிகக் கவனம் செலுத்துவீர்கள் என நம்புகிறேன். அன்புடன்,

க. கண்ணன், அறி.இ., கீரடிப்பட்டி. 621314.

**O : 1554:** தமிழகத்தின் பெருந்தகை பாவலரேறு அய்யா அவர்களுக்கு நனி வணக்கம். தாங்கள் சிறையினின்று பிணையலில் விடுவிக்கப் பெற்று வெளிவந்தது அறிந்து என் நெஞ்சம் குளிர்ந்தது. நிறைவும் அமைதியும் பெறுகிறது. ''மாங்குயில் கூவிடும்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே"
( நிறுவனம் தி. பி. 1990 (1959) )



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை நாம் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 27 தி.பி.உ0உ௫ —மீனம்— (மார்ச்-ஏப். 94) (ஓலை: 5)

# தமிழினத்தையும் தமிழ்நாட்டையும் சீர்குலைக்கிறார், செயலலிதா!



செல்வி செயலலிதா தமிழக முதல்வராய்ப் பதவியேற்றதிலிருந்து, தம்மை வளர்த்தெடுத்த திரைப்படத் துறையின் கலை நிகழ்ச்சிகளின் பாணியிலேயே தம் அதிகார ஆட்சி நிலைகளையும் அரசியல் நடவடிக்கைகளையும் நிகழ்த்தி வருகின்றார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் காட்டலாம்.

அவரின் திட்ட அறிவிப்பு விழாக்கள், மாவட்டப் புதுப்பிப்பு நிகழ்ச்சிகள், அவர் வென்று வந்த தொகுதி மக்களுக்கான நலன்களை அறிவிக்க நூற்றுக்கணக்கான மகிழுந்துகளின் அணி ஊர்வலங்கள், பட்டம் ஏற்பு ஆரவாரங்கள், பட்டமளிப்பு வேடிக்கைகள், இரண்டு மூன்று பிறந்தநாள் விழாக்கள், கும்பகோண மகாமகத் திருவிழா, நெய்வேலித் தண்ணீரைத் தொடர்வண்டிகளில் கொணர்ந்த வெற்று வேடிக்கைகள், ஏழைகளுக்கு வேட்டி, சேலை வழங்குகின்ற ஆரவாரக் கோலாகல

நன்கொடை விழாக்கள், திரைப்படக் கலைஞர்களுக்குப் பரிசில்களும் பட்டங்களும் வழங்கு விழாக்கள், திருவள்ளுவர் நாளில் அறிஞர்களுக்குப் பட்டங்களும் பதக்கங்களும் தருகின்ற ஆரவாரத் திருவிழாக்கள், விளையாட்டுத் திடலைப் புதுப்பித்த வேடிக்கை விழா, காவல் நிலையத் திறப்பு விழாக்கள், கட்டடத் திறப்பு விழாக்கள் என்று இன்னோரன்ன வேடிக்கை விழாக்களையெல்லாம் நாள் வரிசையில் பட்டியலிட்டுக் காட்டினால் இவ்வேடு கொள்ளாது.

இனி, இவ் விழாக்களுக்காக அவர் சூறையாடிய அரசின் வரிப் பணங்கள் எவ்வளவோ கோடிகள் தேறும்! இவ்விழாக்கள் போலவே அவர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வருகை தருவதற்காகச் செய்த காவல்துறையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள், அவர் போய் வருகிற சாலைகளைப் பழுதுபார்க்கவும், அவர் அங்கங்கு ஓரிரு மணிப் பொழுதும், ஓரிரு நாள்களும் தங்கியிருப்பதற்காகப் போக்குவரத்து விடுதிகளை, அரசினர் தங்குமனைகளைப் புதுப்பிக்கவும், குளிரூட்டவும் செலவழிக்கப்பட்ட கோடிக் கணக்கான மக்கள் வரிப் பணங்கள் முதலிய செலவுகளோ கணக்கிலடங்கா. இவையெல்லாம் திரைப்படப் பாணிகளில், அங்குப் படப்பிடிப்பிற்காகப் போடப்படும் காட்சி சுவடிப்புகளுக்காகச் செலவிடப் பெறும் இலக்கக்கணக்கான பொருட் செலவுகளை அறிந்தவர்களுக்கு இம் முதலமைச்சர்க்காகச் செலவிட்ட வீண் ஆரவாரச் செலவுகளும் ஒருவாறு விளங்கும் என்று கருதுகிறோம்.

இவ் வாடம்பர ஆரவாரச் செலவுகளைப் பிற கட்சித் தலைவர்கள் அனைவரும் வெளிப்படையாகவே கண்டித்து அறிக்கைகள் விட்ட வண்ணமாகவே இருந்தும், முதலமைச்சர் செயலலிதா அவற்றைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அண்மையில் கூட அரசியல் சாராதவரும், பதிவு பெறாத அரசுப் பணியாளர் சங்கத் தலைவரும் ஆகிய சிவ. இளங்கோ அவர்கள் முதலமைச்சரதும், அவரின் துணையமைச்சர்களினதும் ஆடம்பர ஆரவாரச் செயலினைக் கண்டித்து ஓர் அறிக்கை விட்டார். அதில், 'முதல்வர் செயலலிதா மாவட்டம் தோறும் கலந்து கொள்ளும் விழாக்களில் ஆடம்பரச் செலவுகளும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதலும் செய்யப்படுகின்றன' என்றும், 'அரசு விழாக்களில் முதல்வர் பொதுமக்கள் எனப்பெறும் 25 பேர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். ஆனால் விழா நடக்கும் ஊர்களுக்குப் பற்பல இடங்களிலிருந்தும் பொதுமக்களில் ஏராளமானோரை வண்டிகளில் அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் கூடுதல் செலவுகள் செய்ய நேரிடுகிறது' என்றும், 'இவ்வாறு ஆயிரக்கணக்கான பயனாளிகளை அழைத்துச் செல்லப்பெறும் பணியில் ஈடுபடும் அரசு அலுவலர்களுக்குப் படிகள் தரப்படுகின்றன. அவை அரசுப் பணங்களாகும்; இச் செலவுகள் முழுவதும் மக்கள் வரிப்பணங்களிலிருந்தே செலவிடப் பெறுகின்றன' என்றும், 'முதல்வர் வருகையை-

யொட்டி ஆங்காங்கு அரசுத் துறைகள் சார்பில் முதல்வரின் வெட்டுருவப் பொம்மைகள் வைக்கப்பெறும் செலவுகளும் அரசுப் பணத்திலிருந்தே செலவிடப்பெறுகின்றன' என்றும் நேரிடையாகக் குற்றஞ் சாட்டியுள்ளார். (தினமணி, சென்னைப் பதிப்பு 14-3-94)

முதலமைச்சர் மேல் அளவிறந்த பற்றும் வெறியும் கொண்ட, அவரால் நன்மை பெறும் அவருடைய அமைச்சர்கள், பெரும் பெரும் முதலாளிகள், மாவட்ட, வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் தங்கள் தங்கள் வகையில் இவ்வாறு முதலமைச்சரின் வருகைக்காகச் செலவிடும் இலக்கக்கணக்கான பணங்கள் பொதுமக்களிடமும் நன்கொடை என்னும் பெயரால் கட்டாயமாகத் தண்டல் செய்யப்பெறும் நிலையும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இவ்வகையில் அடிக்கப்பெறும் வண்ண வண்ணச் சுவரொட்டிகள் மிகப் பெரும் வடிவங்களில், இலக்கக் கணக்கான பொருட் செலவில், இலக்கக் கணக்கில், அவர் வருகை தரும் ஊர்கள் முழுவதும் ஒட்டப் பெறுவதும் மிகவும் அருவருக்கத் தக்கதும் இழிவானதும் ஆகும். இவ் வேலைகளுக்கெல்லாம், அவ்வவ் வூர்களில் வேலையற்றுத் திரியும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு இவ் வகையில் நிறைய பணமும் உணவுகளும் தரப்பெறுகின்றன; இதே முறையில் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்குச் சீருடைகள் தைத்துக் கொடுத்து, முதல்வரை வரவேற்கவும், ஊர்வலங்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இவையெல்லாம் நாட்டின் பொதுப் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும், இளைஞர்களுக்கு இருக்கவேண்டிய பெருமையையும், உயர்நோக்கங்களையும் சீர்குலைக்கும் செயல்களாகும்.

அண்மையில் அவரின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் நிகழ்த்தப்பெற்றன. அடடா! அந்நாளைத் தொடர்ந்து ஒரு கிழமையும் சிலவிடங்களில் அதற்கு மேலும் மதத் திருவிழாப்போல், அதிகாலையிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரை திரைப்படப் பாடல்கள் அளவுக்கு மீறிய இரைச்சலுடன் மக்கள் காதுகளைத் தொளைத்ததை நாட்டு மக்கள் அனைவரும் அறிவர். அந்நாள்களில் சென்னை நகரமே அமளி துமளிப் பட்டது. இவையேயன்றிச் சென்னையைப் பொறுத்த அளவில், இன்னோர் அறக்கொடுமையும், ஆரவாரக் கேடும் அன்றாடம் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளாகும்; முதலமைச்சர் தலைமைச் செயலகம் செல்லும் பொழுதும், நாள்தோறும் நகரின் ஏதோ ஒருபுறத்தில் நடக்கின்ற விழாக்களுக்குப் போகின்ற பொழுதும், வருகின்ற பொழுதும், வழியிலுள்ள சாலைகளிலெல்லாம் செல்லுகின்ற போக்குவரத்து வண்டிகளை அரைமணி முதல் ஒருமணி நேரம் வரை நிறுத்தி வைப்பது மிகவும் கொடுமையானதும், பொதுமக்களுக்குக் கேடானதுமாகும். இந்நிலைகளுக்காகப் பயன்படுத்தப்பெறும் காவல்துறையினர்களும் அவர்களின் கட்டுப்பாடுகளும் இன்னொரு கொடுமையாகும். இவற்றில் சிக்கித் தங்கள் தங்கள் பொழுதுகளையும் பொன்னான பணிகளையும்

வீணுக்கும் பொதுமக்களின் வெற்றுவாய் முணுமுணுப்புகளைத் தவிர, இவற்றை வெளிப்படையாகத் தட்டிக் கேட்கவோ கண்டிக்கவோ எந்தத் தலைவரோ செய்தித்தாள்களோ, வேறு எவருமோ முன் வருவதில்லை; என் செய்வது?

இவ்வாறான வெற்று ஆரவாரங்களுக்கும் வீணான ஆடம்பரங்களுக்கும் இடையில்தாம் முதலமைச்சர் அவர்களின் மக்களைக் கவரும், பொருளடிப்படையில்லாத வெறும் வாய்ப்பீற்றல் திட்டங்கள் கோடிகோடியாய் அறிவிக்கப் பெறுகின்றன. அவை அனைத்தும் செயலலிதாவின் காவிரிநீர் உண்ணா நோன்புப் போராட்டத்தையும், கச்சத்தீவு மீட்பு வாய்வீச்சுப் போராட்டங்களையும் போன்ற வெறும் சொல்லாரவார, வீம்பான வாய்ப் பீற்றல் திட்டங்களே ஆகும் என்பதை மக்கள் உணர்வதற்கு இன்னும் நாளாகும்.

இந்த நிலைகளையெல்லாம் பார்த்தும் பாராதவராய், உணர்ந்தும் உணராதவராய்தான் நம் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும் ஆகிய மானமிகு கி. வீரமணி அவர்கள் அண்மையில், தஞ்சையை அடுத்த வல்லத்தில் உள்ள 'பெரியார் மணியம்மை பெண்கள் கல்லூரி'யில், 'ஈ.வெ.இரா: நாகம்மையார் விடுதி'க் கட்டடத் திறப்புவிழாவில் முதலமைச்சர் செயலலிதாவுக்கு 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்னும் பட்டமளித்துப் பாராட்டியுள்ளார்: இந் நிகழ்ச்சியும் அங்கு அவர் பேசிய பாராட்டுரையும், அதற்குச் செயலலிதா விடையளித்து ஆற்றிய நன்றியுரையும் நமக்குப் பெரும் வியப்பும் வருத்தமும் அளிப்பனவாகும்: இதை அவர்கள் நிலையில் மறுக்கத்தான் செய்வார்கள். நல்ல செயலுக்காக ஒருவரைப் பாராட்டுவது நாம் விரும்பத்தகாத செயலன்று: ஆனால் அப் பாராட்டும் அளவுக்கு மிஞ்சியோ, வெறும் மனவுணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதாகவோ எந்நிலையிலும் இருந்துவிடக்கூடாது என்பதே நம் கருத்தாகும்.

நம்மைப் பொறுத்த அளவில், மானமிகு வீரமணி அவர்களின் மொழி, இன, குமுக(சமூக)ப் பார்வை வேறு; நம்முடைய பார்வை வேறு: இம் மூன்று நிலைகளிலும் பிற ஓரிரு கருத்துகள், செயல்கள் ஆகியவற்றிலும் அவருடைய கோட்பாடும், கொள்கையும், அவற்றுக்கான முயற்சிகளும் தந்தைபெரியாரின் அடிப்படை அறிவு நிலைகளையும், கொள்கை நிலைகளையும், செயல் நிலைகளையும் கொண்ட ஒரு வட்டத்திற்குள் அடங்குவனவாகும்; நம்முடையவை அவ்வட்டத்தையும் சில நிலைகளில் மீறி இயங்குவனவாகும்: ஆனாலும், அவருடைய அனைத்து முயற்சிகளையும் செயற்பாடுகளையும் நாம் சில பல இடங்களில் மனந்திறந்து பாராட்டத் தவறுவதுமில்லை; இருப்பினும், ஏனோ சில பின்புலக் காரணங்களால் செயலலிதாவை, அவர் பதவியேற்ற பொழுதிலிருந்தே, அளவுக்கு மீறி மதிப்பிட்டுப் பேசுவதும் பாராட்டுவதும் ஏன் என்று நமக்குப் புரியவில்லை; அந்த வகையில் கூட

நாம் மிகுந்த மனவடக்கத்துடன், அந்நிலைகளைக் கண்காணித்துக் கொண்டே வந்துள்ளோம். ஆனால் கடந்த கட்டடத் திறப்பு விழாவில் அவர் செயலலிதாவை அளவுக்கு மீறிப் பாராட்டியும் புகழ்ந்தும் உரைத்த கருத்துகளை, நடுநிலையான நம் தமிழ் நலமும் தமிழின நலமும் நாடும் உள்ளத்தால் செரித்துக்கொள்ளமுடியவே இல்லை. இச்செயல் பெரியார்பாணியில் நடந்த செயலாக அவர்கள் காரணங்காட்டிக் கூறுவதையும் நம்மால் மதிப்பிட முடியவில்லை.

திரு. வீரமணி அவர்கள் பாராட்டு என்பது, செயலலிதாவின் துணிவான ஐந்து செயல்களை அடிப்படையாகக் கொண்டது என்று அவர் கூறியுள்ளார்.

ஒன்று, 69 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டை அவர் அறிவித்து, அதைப் பாதுகாக்க ஒரு தனிச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

இரண்டு, தந்தை பெரியார் பெயரில் பல்கலைக்கழகம் ஏற்படுத்த முயற்சி செய்வது.

மூன்று, தங்கள் கழகத்தின் அறக்கட்டளை வளர்ச்சிக்கு உருவா ஐந்து இலக்கம் நன்கொடையாகக் கொடுத்து உதவியது.

நான்கு, தஞ்சை வல்லத்தில் உள்ள தங்கள் கல்வி நிறுவனங்கள் அமைந்திருக்கும் நிலத்திற்கு அரசு தண்டுகின்ற குத்தகைத் தொகையை நீக்கம் செய்து கட்டளை பிறப்பித்தது.

ஐந்து, சென்னையில் மணியம்மையார் சிலை வைக்க உடனடியாக அரசு இசைவளித்தது.

இவ் வைந்து செயல்களில் ஒரு செயல்தான் இன நலத் தொடர்பு கொண்டது. அஃதாவது, 69 விழுக்காட்டு இடஒதுக்கீட்டை அறிவித்து, அதை நிலைப்படுத்த அல்லது பாதுகாக்க ஒரு தனிச் சட்டத்தைக் கொணர்ந்தது.

இவ் வொதுக்கீட்டையும், அதற்கான சட்டத்தையும் நடுவணரசின், பார்ப்பன முதலாளிய அமைச்சரவை ஏற்குமா, அதற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் தருவாரா என்பது ஐயத்திற்குரியதே! அவ்வாறு போராடி ஒப்புதல் பெறுவது என்பது 'அத்தைக்கு மீசை முளைத்தால்' என்னும் பழமொழியைப் போன்றதே!

ஏனெனில், அம்மையார் தொடங்கிய காவிரி நீருக்கான உண்ணா நோன்புப் போராட்டம் நடுவணரசின் சூழ்ச்சியால் முறியடிக்கப் பெற்றதும், அவர் எழுப்பிய கச்சத்தீவுக் கோரிக்கை தவிர்க்கப் பெற்றதும், திருக்குறளைத் தேசிய நூலாக்கும் வேண்டுகை மறுக்கப் பெற்றதும் நாம் இந் நேரத்தில் நினைவுகூரத் தக்கவை. இவ்வகையில் இவரின் ஒதுக்கீட்டுக் கோரிக்கையும் தில்லி ஆளுமையரால் ஒதுக்கப்பட மாட்டாது என்பதற்கு எவ் வகை உறுதியையும் எவரும் தரமுடியாது.

எனவே, இவர் கொண்டு வந்த 69 விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அதற்காக அவர்க்குச் 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்று பட்டமளித்துப் பாராட்டு-

வதும், வாளைாவப் புகழ்வதும் பொருத்தமுடையனவாக நமக்குப் படவில்லை.

மேலும், அவருடைய பிற நான்கு செயல்களும், தி.க. கருத்துப்படி 'சமூக'த் தொடர்புடையவை அல்ல. பெரியார் பல்கலைக் கழகம் அமைவது, ஐந்து இலக்கம் உதவியது, வல்லத்தில் உள்ள கல்வி நிறுவன நிலங்களுக்கான குத்தகை தள்ளுபடி செய்தது, சென்னையில் மணியம்மையார் சிலை வைக்க உடனடியாக இசைவளித்தது ஆகிய நான்கும் திராவிடர்கழகத் தொடர்புடைவையே! இனி தந்தைபெரியார் திராவிடர் கழகத்தினர்க்கு மட்டுமல்லாது தமிழர் அனைவர்க்குமே உரியவர் என்பதால் அவர் பெயரால் பல்கலைக் கழகம் ஒன்று அமைவது நம் அனைவர்க்குமே பெருமையும் பெருமகிழ்வும் தருவது என்பதும் எவராலும் மறுக்க முடியாததும், விரும்பப்படுவதுமான செயலே ஆகும். என்றாலும், அதற்காகவன்று அம்மையாருக்குச் 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்னும் பட்டம் தருவது. மற்ற மூன்று செயற்பாடுகளும் கூட 'சமூக'த் தொடர்பு உடையவை என்று கூறமுடியாது. அவையும் இயக்கத் தொடர்புடையவையே. ஏனெனில் பெரியார் பெயரையும், நாகம்மையார் பெயரையும், மணியம்மை பெயரையும் கொண்டுள்ள கல்வி நிறுவனங்களில் நம் தமிழினத்தவர்கள் (தி.க.வின் கொள்கைப்படி திராவிட இனத்தவர்கள்) என்பவர்கள் கூட, உடனே ஓடி இலவயமாகவோ அல்லது இயல்பான—ஞாயமான கல்விக் கட்டணங்களைச் செலுத்தியோ, சேர்ந்துவிட முடியாது. பார்ப்பன—பிற இனத்தவர்களின் தனிப்பட்ட—தனியாளுமைக் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்குத் தரும், கட்டட வளர்ச்சி, அறக்கட்டளை வளர்ச்சி, முதலியவற்றின் பெயரால் இருபதாயிரம் முதல் ஐம்பதாயிரம் வரை கையூட்டுத் தந்தே சேரவேண்டியுள்ளதாகக் கேள்விப்படுகிறோம். மற்றபடி, தமிழினத்தவர் என்றோ ஏழைகள் என்றோ எவரும் அந்நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதோ, பட்டம் பெறுவதோ இயலாது. இதற்குமேல் அக் கல்வியமைப்புகளில், குறிப்பாகப் பெண்களுக்கான கல்வி நிறுவனங்களில் நடக்கின்ற பல்வேறான முறைகேடுகளையும் வரைகேடுகளையும் பற்றிக்கூட பலவாறாகப் பேசப் பெறுவதும் குறிப்பிடத் தக்கது. எனவே, 'சமூக' நீதி காத்தலுக்குரிய செயல்' என்று இவற்றை முழுமையாகக் கருதிவிட முடியாது.

அவர், அவ்விழாவில் செயலலிதாவைப் போற்றிப் புகழ்ந்த உரைகளையும், அவற்றுக்குச் செயலலிதா கூறிய நன்றியுரையையும் இவ்விடத்தில் மீண்டும் ஒரு முறை நினைவு கூர்ந்து பார்ப்பதுடன், நம் அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகின்றோம். இது நம் அனைவரின் எதிர்கால நன்மைக்கே தவிர, மதிப்பிற்குரிய வீரமணியவர்களைக் குறைத்து மதிப்பிடுவதற்காகக் கூறப்படுவதன்று என்பதை முதலிலேயே கூறிக் கொள்ள விரும்புகின்றோம். அவரின் பாராட்டுரையும் புகழுரையும் (சுருக்கமாக) கீழ்வருமாறு:

''இவ்வளவு பெருமைக்குரிய முதல்வர் என்று அழைக்கிற நேரத்திலே, உங்களை அதிகாரத்தில் இருக்கிற முதல்வராக மட்டும் அன்று, நீங்கள் அதிகாரத்திலே இல்லாவிட்டாலும் கூட எங்கள் நிலையான (நிரந்தர) புரவலராக, இந்தக் கல்லூரியும் இந்தக் கல்வி நிறுவனங்களும் என்றைக்கும் அழைக்கும். காரணம் நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கொடுத்த ஐந்து இலக்க உருவா கற்களாக, அறைகளாக, கட்டடப் பகுதிகளாக உருவாகியிருக்கின்றன'' (விடுதலை: 15-3-94).

மதிப்பிற்குரிய வீரமணி அவர்களின் இந்த முத்தாய்ப்பு முன்னுரை இரண்டு உறுதி மொழிகளைக் குறிப்பிடுகிறது. ஒன்று முதலமைச்சர் செயலலிதாவிற்கு மட்டுமன்று, தனிப்பட்ட செயலலிதாவிற்கும் என்றென்றும் அவரின் ஆதரவும் பெருமையும் உண்டு என்பது. இரண்டு, அவர்தம் கட்சிச்சார்பில் கொடுத்த ஐந்து இலக்க உருபா நன்கொடைதான் அவரை நிலையான பெருமைக்குரிய புரவலராக ஆக்கியிருக்கிறது என்பது.

இந்த முத்தாய்ப்பு உரை தேவைதானா என்பதை மதிப்பிற்குரிய தி.க. பொதுச் செயலாளர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் செயலலிதா பெருமைக்குரியவராம்! அவர் முதலமைச்சர் பதவிக்கு வருவதற்கு முன்னர் வெறும் திரைப்பட நடிகையாக இருந்த நிலையில் அவரை ஏன் பொதுச்செயலாளர் பாராட்டிக் கொள்ளவில்லை? காரணம் அவர் அக் கழகத்திற்குக் கொடுத்த ஐந்து இலக்க உருபா நன்கொடை என்று அவரே கூறியிருக்கிறார்; 'வறியார்க்கொன் றீவதே ஈகை; மற் றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து' (221) என்னும் திருக்குறளை அவர் கற்றிருப்பார்; அதன்படி ஏதாவது ஒரு நன்மையை எதிர்பார்த்துத்தான் செயலலிதாவின் நன்கொடை இருந்திருக்க வேண்டும் என்பதை விளங்கிக் கொண்டிருக்க வேண்டுமே! அந்த நன்மை திராவிடர் கழகத்தின் 'எதிர்ப்பின்மை'யாக இருக்கலாமா என்று எண்ண வேண்டியுள்ளதன்றோ?

தமிழகத்தில், ஏன், இந்தியாவிலேயே கூட பார்ப்பனீய எதிர்ப்பையே கொள்கையாகக் கொண்டு இயங்கும் இயக்கம் ஒன்று இருக்குமானால், அது தி.க.வே. அதைத் தவிர அதன் நோக்கில் வேறு ஓர் இயக்கம் இருப்பதாகக் கூறமுடியாது. அவ்வாறுள்ள நிலையில், அதையே தமக்கு ஆதரவாக அடிப்படுத்தி ஏவுலும் காவலும் கொள்ள வைப்பது செயலலிதாவின் வெற்றியே தவிர, வீரமணி அவர்களின் வெற்றியாக அது இருக்கமுடியாது. பார்ப்பனர்களுக்காகவே உழைத்த இராசாசி கூட பெரியாரை எந்த நிலையிலும் வெற்றி கொண்டார் என்று கூறிவிட முடியாது. எனவே இது செயலலிதாவின் திறமையையே குறிப்பதாகும்! தி.க.விற்கு இது சிறுமையேயாகும்!

பொருட் கொடை என்பது பெருமைக்குரிய ஒரு செயலாகுமா? அதுவும் நிரம்பி வழியும் பொருட் செல்வத்தை வைத்திருக்கும் ஒருவர், தம் பெநமையையும், தமக்குள்ள ஆதரவையும் நிலைநாட்டிக் கொள்ள, தம் செல்வ வளத்தின் மிக மிகச் சிறிய ஒரு பகுதியை நன்கொடையாகத் தருவதுதான் நிலையான பெருமைக்குரியதா? அதைத் தம் இயக்கத்திற்குப் போதுமான இருப்பும் வருவாயும் உள்ள தலைவர் ஒருவர் கைநீட்டி வாங்கிக் கொள்வதும் அதற்காகப் புகழ்ச்சி கூறுவதும் இழுக்கன்றோ? தன்மான இழப்பன்றோ? வீரமணி அவ்வாறு ஏழ்மை நிலையிலிருந்து இயக்கத்தை நடத்திடவில்லையே! ஏறத்தாழ பதினைந்து கல்வி நிறுவனங்களை வைத்து நடத்தும் ஒரு பெரிய இயக்கத்திற்கு இந்த ஐந்து இலக்கம் ஒரு பெரிய நன்கொடையா என்ன? அதற்காக ஒரு பேரியக்கத்தின் செயற்பாட்டையே அரசியலில் வந்து போகும் ஒரு முதலமைச்சரின் இயல்பான அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வைப்பதுதான் தன் மதிப்பா(சுயமரியாதையா)?

சாமம் (ஒப்புரவு பேசுவது), பேதம்(எதிரியை வேறுபடுத்துவது அஃதாவது பல பிரிவுகளாக உடைப்பது), தானம்(ஏதாவது பணம் கொடுத்துத் தனக்கு ஆதரவாகச் செய்து கொள்வது), தண்டம் (எதிரிக்குத் தண்டனை கொடுத்து அச்சுறுத்தித் தன்வயப்படுத்திக் கொள்வது; அஃதாவது 'தடா' போலும் கொடிய சட்டங்களை ஏவிவிட்டு அச்சுறுத்தித் தண்டித்துத் தனக்கு ஆதரவாகச் செய்து கொள்வது)— எனும் எதிரிகளை வீழ்த்தும் பார்ப்பனரின் நான்கு உத்திகளில் 'தானம்'(அன்பளிப்புச்)செய்து தனக்குள்ள எதிர்ப்பை அழிக்கும் உத்தியும் ஒன்றென்று வீரமணி அவர்களுக்கு ஏன் புலப்படவில்லை?

பொருளியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் கோணத்திலேயே மதிப்பிற்குரிய வீரமணியவர்கள் முதல்வர் செயல்லிதாவைக் கல்லூரி விடுதிக் கட்டடத் திறப்பு விழாவிற்கு அழைத்ததும், அவருக்குச் 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்று பட்டம் வழங்கிப் பாராட்டுச் செய்ததும் அவ்வியக்கத்திற்குப் பெருமை சேர்ப்பதாகக் கருத முடியாது. மேலும் அவருடைய பேச்சில் முதலமைச்சர் செயலலிதாவிற்கு இன்னோர் உறுதிமொழியையும் தந்துள்ளார், அ'து, 'உங்கள் ஆட்சிக்கு எந்த இடத்திலிருந்து எதிர்ப்பு ஏற்படுமானாலும் அஃது எவ்வளவு பெரிய இடத்திலிருந்து வந்தாலும் கருப்புச் சட்டைப் படையினர் தற்கொலைப் பட்டாளம், கருப்பு மெழுகுவர்த்திகள் ஆகிய எங்களை அழித்துக் கொண்டு சமுதாயத்திற்கு ஒளி கொடுப்பவர்கள், என்றென்றைக்கும் அவற்றை முறியடித்து, ஆட்சிக்கு உறுதுணையாக இருப்போம்' என்று இந்த மாபெரும் மக்கள் மன்றத்தின் முன்னாலே நான் சொல்ல விழைகிறேன்' என்பதாகும்.

இதனை அவர் மிகுந்த உணர்வு வயப்பட்டுத்தான் பேசியிருக்கவேண்டும்; இல்லெனில் சொற்களை அவர் இவ்வளவு

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)

இம் மாதச் சிறப்பு மடல்:

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்பமொழிவதாஞ் சொல்!

# பாவலரேறுவின் ஈரோடைச் சொற்பொழிவு!

மடல்: 1

அன்புமிக்க பாவலரேறு அய்யா அவர்களுக்கு, வணக்கம். தங்களின் (14-2-94) ஈரோடு, பாவாணர் பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டப் பேச்சு, மிகவும் வேறுபட்டதாகவும், இக் காலத்துக்கு ஏற்ற வகையாகவும் அமைந்திருந்தது. இதுவரை தங்களின் பேச்சுகளைத் தொடர்ந்து கேட்டு வரும் பலரும் இதே கருத்தைத் தெரிவித்தனர். நகைச்சுவையுடன் பேசியது பலரை-யும் வியப்பில் ஆழ்த்தியது. மேலும், இளைஞர்களின் கைதட்டல் பெறும் வண்ணம் தங்கள் பேச்சு இருந்தது. தங்களுடைய கோட்பாடுகளிலிருந்து சிறிதும்பிறழாமல், ஆனால் எளியவ(பாமர)ரையும் சென்றடையும் வகை தங்கள் பேச்சு இருந்தது. இது போன்ற பேச்சுகள் தொடர வேண்டுகிறேன். அன்புடன்,

—அ.தமிழன்பன், ஈரோடு-4.

மடல்: 2

பேரன்புப் பெருந்தகை மேதகு பாவலரேறு அய்யா அவர்கட்கு என் பணிவான வணக்கங்கள் பல.

மடல் காலத்தாழ்வுக்கு மன்னிப்பை வேண்டுகிறேன். காரணி-யம் விழாவுக்கு அடுத்த நாளிலிருந்து உடல்நலக் குன்ற இன்று தான் சிறிது குறைந்துள்ளது.

விழாவில் அய்யா ஆற்றிய சொற்பொழிவை விழாவில் கலந்து கொண்ட அத்தனைப் பேருமே வெகுவாகப் புகழ்ந்தார்கள். அய்யாவைச் சந்தித்த பெரியார் மாவட்ட நடுவண் புலனாய்வு ஆய்வாளர் அவர்களே இல்லத்திற்கு வருகை தந்து மேலாகப் பாராட்டினார்.

அய்யாவின் சிறப்புப் பொழிவைப்பற்றித் தோழர்கள், 'புலிகள் நடக்கும் வரிகள்—புயல் வீசும் சொற்கள்—எரிமலைச் சொற்றொடர்கள்—இடி இடிக்கும் சொற்கள்' என்றனர்.

'அலைகடலின் ஆர்ப்பாட்டம்—அருவியின் ஆலோலம்—சிறுத்தையின் சீற்றம்—'சிங்க'த்தின் முழக்கம்(கர்ச்சனை)—யானை-யின்பிளிறல்—கடலாழக்கற்பனை—விரிவானசிந்தனை—சொற்பதப் பாநயம்—சிலம்பாடும் உரை எழில்—கல்வி விரிவு எனப் பலவகை-கூறிக் களிமகிழ்வெய்திக் கரவின்றிப் புகழ்ந்தார்கள். அதுமட்டு-மன்று; அ'து ஒரு பொதுக் கூட்ட நிகழ்ச்சியாகவே அமைய-வில்லை; ஒரு பெரிய மாநாட்டுப் பொழிவென்றே கூறினார்கள். அய்யாவைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டிருந்த திராவிடர் கழகத் தோழர்களே வியப்பாகப் புகழ்ந்தார்கள்.

கூட்டம் மிகப் பெரிய எழுச்சியைத் தந்து வெற்றியான மாநாடு போல் திகழ்ந்தது எனப் 'புரட்சிகர இளைஞர் முன்னணித் தோழர்களும் வெகுவாகப் புகழ்ந்தார்கள்.

நான் கூறுவது அத்துணையும் உண்மை; மிகையன்று; இவ்வளவு அச்சுறுத்தல் நாட்களிலும் இவ்வளவு வெற்றியுடன் அய்யாவை அழைத்து வந்து கூட்டத்தை நடத்தி முடித்த என்னையும் பாராட்டினார்கள். அதுவும் ஒப்புதல் பெற்ற ஒரே கிழமையில் எவ்வகைக் குறைபாடும் வராமல் வெற்றியுடன் நடத்தி முடித்த நிலையையும் வெகுவாகக் கூறினார்கள்...

அய்யா விடுதி அறையில் தங்கியிருந்த போழ்து நடந்த கலந்துரையாடல் குறித்து அனைத்துப் புரட்சிகர இளைஞர் முன்னணித் தோழர்களும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். மேலான கருத்து விளக்கம் பெற்றோம் என்றார்கள்; அனைவரும் அய்யா ஒரு 'கருத்துப் பெட்டகம்' என வானளாவப் புகழ்ந்தார்கள்.

அத்துடன், விடுதி அறையில் அய்யாவுடன் தங்கியிருந்த என் மகன் சோழனுக்காக அய்யா கூறிய மேலான வாழ்க்கை மெய்ம்மத்தை எண்ணி எண்ணி இறும்புதெய்துகிறான்; மேலான அமைதியும் அவன் பெற்றுள்ளான்; இது குறித்து அய்யாவுக்கு என் மேலான நன்றிகள்; தங்கள் தமிழ்த் தொண்டுக்கு என் தலையாய வணக்கங்கள்;

அன்பன்,
தி.மு. அரசமாணிக்கம், ஈரோடு-11;

மடல் : 3;

வீறு மிகு ஐயா அவர்களுக்கு வணக்கம்; ஐயா நீண்ட நாட்களுக்குப் பின், நீண்ட சிறைக் கொடுமைக்குப்பின் கடந்த கும்பத்திங்கள் இரண்டாம் நாள், (2-2-2025. (14-2-94) அன்று ஈரோட்டில் நேரில் காணும் ஏந்து கிடைத்தமைக்கு மிக மகிழ்வடைகிறேன். எவ்வளவு கொடுமைகளுக்குப் பின்னரும், தங்கள் கொள்கையில், சிறிதும் தளர்ச்சி தட்டாத, செம்மாப்பும் வீறார்ந்த பேச்சும், உண்மைத் தமிழனைக் கண்ட மன நிறைவை உண்டாக்கியது. கொள்கையில் மலையாக நிற்கும் கொள்கைக் குன்றாகத் தோன்றினீர்கள். எதையோ எதிர்பார்த்து, உயிரைவிட மேலாகப் போற்றப்படவேண்டிய பண்புகளையெல்லாம், துணியைக் கழற்றி எரிவது போல வீசியெறிந்துவிட்டும், எங்கே விழுந்தால், எத்தனை தடவை விழுந்தால் என்ன? எவ்வளவு கிடைக்கும் என்று கணக்குப் போட்டுக் கொண்டு, மானத்தை அறவே விட்டவர்கள் மாபெருந் தலைவர்களாக உலா வருகின்ற இக் காலகட்டத்தில், யாருக்காக உழைக்கிறோமோ, அவர்களே சிறிதும் கண்டுகொள்ளாமல் இருந்தும், 'போற்றுவோர் போற்றட்டும்; புழுதியை வாரித் தூற்றுவோர் தூற்றட்டும்; துணிந்து செல்வேன்; தனித்தே யானும் செல்வேன்' என்ற தங்களின் நெஞ்சுறுதி எம்மை வியக்க வைத்தது.

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம்)




**நூல்: வள்ளுவத்தில் அறிவியல்**

ஆசிரியர் : மருத்துவர். க.கோபால்.
வெளியீடு : வள்ளுவர் அறிவியல் மையம்.
கே.ஜி.மருத்துவமனை,
அரும்பாவூர்-621103' திருச்சி மாவட்டம்.

விலை : உருவா 18/-

அறிவியல் உண்மைகள், மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய அறிவியல் சார்ந்த அறங்கள், திருக்குறள் ஒரு கணிப்பான், வள்ளுவர் வலியுறுத்தும் பரிணாமக் கொள்கை, ஆகிய நான்கு பகுதிகளிலும் நூலாசிரியர் மருத்துவர் கோபால் அவர்களின் அறிவியல் சிந்தனை அரங்கேறி உள்ளது.

நாடறிந்த அறிஞர் பெருமக்கள் திரு. இளங்குமரனார், திரு. சோ.சத்தியசீலன், திரு. இரா. கலைக்கோவன் ஆகியோர் நல்வரவு நவிற்சியும் வாழ்த்துரையும் அணிந்துரையும் வழங்கியுள்ளனர்.

உலக நல்வாழ்வு கருதிய குறளறிவியல் கொள்கைகள் அனைத்தும் மாந்த நல வளர்ச்சியின்பாற் பட்டதாகும். முறையான முதிர்ச்சியால் மூத்துச் சிறந்த திருவள்ளுவரின் வாழ்வியல், அறிவியலை வெளிப்படுத்துவதை முகாமையாக, முழுமுதல் நோக்கமாகக் கொண்டுள்ளது இந்நூல்.

உளதாகும் அறிவு (குறள்: 373), கற்றனைத் தூறும் அறிவு (குறள் 396), உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு(குறள் 426) என திருவள்ளுவர் குறிப்பிடும் அறிவு நிலைகளை நூலாசிரியர் முறையே இயற்கை அறிவு, செயற்கை அறிவு, உலகியல் அறிவு என மூன்றாகப் பகுத்துக் காட்டி விளக்கம் அளித்துள்ளார்.

உலகில் உள்ள அனைத்துச் செயல்களும் கணிதத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும் என்று அறுதியிட்டு இந் நூலாசிரியர் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

அளவைகளில் திருவள்ளுவரின் சிந்தனைகள், அவரின் பத்து உடைமைகள், குறளார் வெறுக்கும் ஆமைகள், உழவுத் தொழிலில் திருவள்ளுவரின் நுண்ணோக்கு, விலங்குகள், நிலைத்திணைகள் (தாவரங்கள்) பற்றிய திருவள்ளுவர் சிந்தனைகள், ஆகியனவற்றைத் தொகுத்தும் வகுத்தும் நூலாசிரியர் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். வாழ்வாங்கு வாழ அவர் காட்டும் நான்கு வழிகளைக் கூறி நூலை நிறைவு செய்கின்றார்.

அறிவியல் வல்ல தமிழரின் இலக்கியப் பார்வை இந்நூலில் பளிச்சிடுகின்றது. ஏனைய தமிழ் இலக்கியங்கள் மாட்டும் இம் மருத்துவரின் அறிவியல் பார்வை படுமாயின் தமிழுக்குப் பல்லாற்றானும் ஆக்கமும், புதுப்பொலிவும் ஏற்பட வாய்ப்புண்டு.

—முனைவர். கடலூர் மணிமாறன்.

நூல்: சுடர் விழிகள்

ஆசிரியர் : பாவலர் இளமாறன்,

வெளியீடு : மலர்க்கொடி பதிப்பகம்,
ஜெ. 43, பாரதிதாசன் சாலை,
திருநகர், சென்னை-600 083.

விலை: உருவா 15/-

பாவலர் இளமாறன் அவர்கள் மொழி, இன, நாட்டு நலனில் பெரிதும் வேட்கை மிக்கவர் என்பதை அவர்தம் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு பாடலும் இவரை ஒரு மாந்தநேயப் பாவலராக முன் நிறுத்துகின்றது.

'தமிழ்க் கல்வி ஏனில்லை இந்த நாட்டில்' என வினவும் இவர், தமிழை மாய்க்கும் திருப்பணியைப் பெரும் பணியாய்த் தமிழ் நாட்டு ஆட்சியாளர் கொண்டுள்ளார் என்று குமுறுகின்றார்:

போலிமுகங்களில் அரசியல் நடத்தும்
பொய்ம்மைச் சருகுகளே—புழுப்
புரளும் சகதிகளே—நீர்
காலித் தனத்தால் நாட்டைச் சுரண்டிடக்
காலம் பொறுத்திடுமா—எம்
கைகள் உறங்கிடுமா?

என்று அரசியலில் புகுந்துவிட்ட போலிகளைச் சாடுகின்றார். இவர் தம் திமிர்ந்த போர்க்குணமும், தீயன கண்டு கட்டெரிக்கும் சுடர் நோக்கும் 'சுடர் விழிகளில்' படர்ந்துள்ளன.

'எழுகதிரைச் சிறு துளியா மறைக்கக் கூடும்' என்ற இனிய உவமை மூலம் பாவேந்தரை இருட்டடிப்புச் செய்வோரைப் பழிக்கின்றார். மொழியுணர்வுக்கு முதன்மையாய் நல்கிப் பொது-வுடைமை, பெண்ணுரிமையைப் பாடிய பாவேந்தரைப் புகழ்ந்து பூரிப்பும் பெருமிதமும் கொள்கின்றார். வறுமையும் தீரவில்லை, வயிற்றுக் கொடுமையும் மாறவில்லை. இந் நிலையில் விடுதலைக்குப் பெருமை ஏது? என நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றார் இவர்.

காவிரி நீரைத் தடுப்பதோடு, தர மறுப்பதோடு நடுவர் மன்றத்தீர்ப்பினை மதிக்காமல் தமிழரைக் கொல்லத் துணியும் கன்னடியரை எதிர்த்துப் போர்முரசு கொட்டுகின்றார். மண்டல் குழுவின் பரிந்துரைகளை எடுத்துக் கூறிக் குமுக நயன்மைக்குக் குரல் கொடுக்கின்றார்.

தமிழனைத் தமிழனே தாழ்த்துகிறான்: அவன்
தம்பியே வீழ்த்துகிறான்'

என்னும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தாக்கம் பெற்றவராய்ப் பாவலர் இளமாறனும், தமிழனே தமிழனைத்

தாக்குகிறான்' என்று கவல்கின்றார். கனவுகளைப் பற்றி இவர் பாடுங்கால்,

நுண்ணிய அறிவியல் வளர்ச்சிக் கதுவே
நுட்பம் மிகுந்த நுழைவாயில்—மன
நுகர்ச்சிக் குதவும் கலைக்கோயில்"

என்று குறிப்பிடுவது இவரின் சொல்லாட்சித் திறனுக்கோர் அரிய சான்றாம். தமிழ்வழிக் கல்வி, ஈழவிடுதலை, அறிவியல் சிறப்புகள் ஆகியவற்றையும் பாடியுள்ள இப் பாவலர் விரிந்த சிந்தனையும், பரந்த நோக்கமும் உள்ள பொதுமைப் பாவலராய் விளங்குகின்றார். 'சுடர் விழிகள்' இனமானச் சூடேற்றும் ஓர் உயரிய மரபுப் பா நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

—முனைவர் கடலூர் மணிமாறன்

நூல்: பேசும் விரல்கள்

ஆசிரியர்: அலீம் சபா நவீதி
தமிழாக்கம்: சஜ்ஜாத் புகாரி
வெளியீடு: தமிழ்நாடு வெளியீட்டகம்
26, அமீருன்னிசா பேகம் தெரு,
அண்ணாசாலை, சென்னை-600002

விலை: உருபா: 15/-

உருது, தமிழ் இரண்டிலும் புலமை சான்ற சஜ்ஜாத் புகாரி அவர்கள் உருது இலக்கிய உலகில் நன்கு அறிமுகமான பாவலர் அலீம் சபா நவீதி புனைந்த உருது நறுக்குப் பாக்களைத் தமிழாக்கமாகப் 'பேசும் விரல்கள்' என்ற பெயரில் நூலாக வழங்கியுள்ளார்.

ஏறத்தாழப் பத்தாண்டுகளாக இந் நறுக்குப் பாக்கள் தமிழிலும் ஒரு தனி இடத்தைப் பெற்று வருகின்றன, நூலாசிரியர் உருதுவுக்கும் தமிழுக்கும் ஒரு நல்ல பாலமாக விளங்குகின்றார். சப்பானிய மொழியின் இலக்கியக் கொடை நறுக்குப் பாடல்கள் (ஹைக்கூ) எனலாம்.

வடிவம், உள்ளடக்கம் மற்றும் வெளிப்பாட்டுத் தன்மை இவை இரண்டும் சப்பானிய நறுக்குப் பாடல்களின் இரண்டு கோட்பாடுகள் ஆகும்.

தமிழில் அத்தகைய நறுக்குப் பாடல்களைப் பாவலர்கள் அப்துல் ரகுமான், மு.மேத்தா, தமிழன்பன், அறிவுமதி போன்றோர் எழுதியுள்ளனர்.

அழகிய சொல்லோவியங்களையும், புதுமையான உவமைகளையும் கற்பனை வளஞ்சான்ற கருத்துகளையும் உள்ளடக்கிய உருது நறுக்குப் பாடல்களை அதே ஆழமான, அழுத்தமான சிந்தனைப் போக்கில் அலீம் சபாநவீதி வழங்கியிருப்பதும் நூலாசிரியர் அவற்றின் மெருகு குலையாமல் தமிழாக்கம் செய்திருப்ப-

தும் பாராட்டுக்கு உரியன. மாந்த உறவுகள் நிலையை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டும்போது,

'மனித உறவுகள்
மூடுபனி சங்கிலித்தொடர்
பாதையாவும் அடைப்பு'

என்று குறிப்பிடுகின்றார். அலீம் சபா நவீது அவர்கள் குறுக்குப் பாடல்களின் எல்லையை விரிவுப்படுத்தியிருப்பதாகவும், அதனைச் செழுமைப்படுத்தி இருப்பதாகவும் நூலாசிரியர் பெருமையும் பெருமிதமும் கொள்கிறார்.

''மன விழிப்பு
வானூயர் கண்காட்சிகள்
சூரியத் தோழன்''

என்பது போன்ற 5—7—5 அசைவுகளைக் கொண்ட மூன்றடிப் பாடல்கள் நூலாசிரியரின் பாவன்மைக்குப் போதிய சான்றும்.

சப்பானிய இலக்கியக் கனியை, உருதுமொழியின் நிலத்துள் விதைத்துக் கடும் உழைப்பாலும் விடாமுயற்சியாலும் உருதுக் கனியாக்கி, அதனைத் தமிழ் மொழியிலரும் சுவைக்கத் தந்துள்ள சஜ்ஜத் புகாரி அவர்கள் நம் பாராட்டுக்கும் மதிப்புக்கும் உரியவர் ஆகிறார். —முனைவர். கடவூர் மணிமாறன்.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'உயிரென்ன வெல்லக் கட்டியா? போனால் போகட்டுமே' என்ற முழக்கம் எழுச்சியூட்டுவதாக இருந்தது. தங்கள் வாழ்வானது சங்ககாலப் பெருஞ்சித்திரனாரை நினைவூட்டுவதாக இருக்கிறது. 'தென்மொழி' பற்பல உணர்வாளர்களை உருவாக்கியுள்ளது. ஆனால் பலர் இடையில் எதற்கோ மயங்கி, எதையோ எதிர்பார்த்துப் பரத்தமை(சோரம்) போய்விட்டார்கள்; தொலையட்டும். ஆனால் முற்றாக அழிந்துவிடவில்லை. பயிர்கள் களையெடுத்த பின்னர் செழிப்புடன் வளரும். அதுபோன்ற நிலை தான் இப்போது உருவாகி வருகிறது. அதற்குத் 'தென்மொழி'க் கருத்துகள் உரமாகப் பயன்பட்டு வருகின்றன. உழைப்பு வீண் போகவில்லை; போகாது. வரலாறு படைத்தவர்கள் எவரும் துன்பப்படாமல் இல்லையே. பெரியார் அவர்கள் முக்கால் நூற்றாண்டு பாடுபட்டுக் கட்டியெழுப்பிய தன்மான உணர்வெல்லாம் அந்தப் பெரியார் பெயர் சொல்லியே, அவரின் உண்மைப் பற்றாளர்கள்(சிடர்கள்) என்பவர்களாலேயே காயடிக்கப் படுவதைக் கண்டும், சோம்பியிருக்கிறார்களென்றால் அவர்கள் யாராக இருந்தால் என்ன? தூ வெனத் தள்ளிவிட்டுத் தொடர்வோம் வழிச்செலவை(பயணத்தை). தங்களின் தொண்டிற்குச் சிறு உதவியாக ஒரு நூறு உருவாக்கள் அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்க! தங்கள் பணி தொடரட்டும். எம் போன்றோர் உதவியும் தொடரும்; தங்கள் வெற்றி தமிழனின் வெற்றியாகத் தான் இருக்கும்!

அன்பன்,
—புலவர்: அறிவுடைநம்பி, மூலனூர்.

(அட்டை பக்கத் தொடர்ச்சி)

தும் 'தம்பி' என்று அழைத்து, 'இன்று அம்மா வந்தாங்க இன்று சின்ன அண்ணன் வந்தார். அக்கா வந்தாங்க' என்று குடும்பப் பாசத்துடன் செய்திகளைக் கூறுவதும், அவ்வப்பொழுது நான் கேட்கும் அய்யப்பாடுகளுக்கு எவ்வளவு முகாமையான வேலையில் ஆழ்ந்திருந்தாலும் பொறுமையாக விளக்கமளிப்பதும், திருக்குறளிலிருந்து மேற்கோள் காட்டித் தாங்கள் எனக்கு விளக்குவதும் என்னால் என்றும் மறக்க முடியாத செய்திகளாகும். மேலும் அய்யா, தங்களின் உடல்நலத்தைப் பற்றிக்கூட கவலைப் படாமல் 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை' எழுதுவதிலேயே கண்ணும் கருத்துமாக எந்த நேரமும் அதே சிந்தனையாக இருந்த செயல்பாட்டைப் பார்த்து, இந்த அகவையிலும் இப்படிச் செயல்படுகிறார்' என்று அடிக்கடி அண்ணனிடம் சொல்லி மெய்சிலிர்த்துப் போனதுண்டு.

அய்யா, தாங்கள் சிறையிலிருந்து சென்றபின் நானும் அண்ணனும் எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்வுடனேயே உள்ளோம். இருப்பினும் நானும், அண்ணனும் தங்களைப் பற்றிய பசுமையான நினைவுகளை அடிக்கடி பகிர்ந்துகொள்கிறோம், தங்களுடன் சிறிது காலம் இருந்தாலும், என் வாழ்நாளில் கற்றுக்கொள்ள முடியாத பல செய்திகளை, கருத்துகளை தங்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். இவை என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதவை ஆகும்.

அய்யா, சந்தனத் தலையாளிகள் அனைவருக்கும் பிணையல் கிடைத்துவிட்டது. விரைவில் சென்றுவிடுவார்கள். இதுவரை அவர்களை அண்ணன் நல்லபடியாகப் பார்த்துக்கொண்டார்.

அய்யா, இந்தத் தமிழ்க் குமுகாயமும், தமிழும் தலைநிமிர்ந்து நிற்க முழு மூச்சாய்ச் செய்யப்படும் தங்களைப் போன்றவர்கள் உடல் நலத்தில் முகாமைக் கவனம் செலுத்த வேண்டும். எனவே, அய்யா அவர்கள் தங்களின் உடல்நலத்தை மிகவும் நல்லபடியாகப் பார்த்துக் கொள்வது மிகவும் இன்றியமையாதது. மற்றபடி, 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை' எழுதி முடித்துவிட்டீர்களா அய்யா? தங்களின் திருக்குறள் உரை, வெளியிடும் நாளை ஆவலோடு எதிர் நோக்கியுள்ளேன். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்க் குமுகாயம்!

அன்பன்

— நா. செல்லமுத்து

'தடா'ச் சிறையாளர், நடுவண்சிறை, சென்னை-3.

O : 1559: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு, வணக்கம். ஒவ்வொரு சந்திப்பிலும் தங்களிடமிருந்து புதிய விளக்கங்கள் பெறுகின்றேன். சென்ற சந்திப்பின்போது தாங்கள் மிகவும் களைப்படைந்து ஓய்வு தேவைப்படும் நிலையில் இருந்ததை அறிந்து விரைந்தே விடை

பெற்றுக் கொண்டேன். அந்தச் சிறிது நேரச் சந்திப்பிலும் பொதுத் தொண்டில் ஒவ்வொருவரும் அவரவர் தகுதி, திறமை, அறிவு, உணர்வின் அடிப்படையில் செயல்படுவர் இதில் அடுத்தவரின் பங்கு பற்றி எதிர்பார்ப்போ, ஏமாற்றமோ கூடாது என்பதை விளங்கிக் கொண்டேன். தங்களன்பன்

—சா. குணசேகரன், அம்மச்சியாபுரம், தேனி.

O : *1560:* பேரன்பு நிறைந்த தமிழறிஞர் ஐயா அவர்களுக்கு, வணக்கம். அருட்கையன் எழுதும் மடல். நல்ல நலமுடன் இங்கு வேலை செய்து வருகிறேன். தாங்கள் விடுதலை பெற்ற செய்தி 'தென்மொழி' இதழ்கள் கிடைத்ததின் வழி அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தங்களைச் சிறைப்படுத்திய செய்தி மிக்க வருத்தியது. பிணையல்கள் தொடர்ந்து மறுத்தாலும் தங்களின் கருத்தில் மாற்றமில்லை என்று சிறைக் கொடுமை ஏற்று,

'சிறை எனக்குத் துன்பமில்லை; கொடுமையில்லை;
மறைவுறு நம் பெருமைகளை, உரிமைகளை
மலர்த்துவகையில் அனைத்தும் ஒன்றே!

—என்ற தங்களின் முதல் முகப்புப் பாடல் தமிழினம் மேல் நீங்கள் கொண்டுள்ள ஆழமான அன்பையும் அக்கறையை உணரச் செய்கிறது.

ஐயா, தங்களிடம் பணிபுரியும் வாய்ப்புக் கிடைக்கும் வரையில் மொழி, இனப்பற்று சற்றும் அறியவில்லை. தூய்மையான தமிழும் தெளிவான கருத்துகளும் தென்மொழி வாயிலாகவே தெரிந்து வருகிறேன். தொடர்ந்து தென்மொழி இதழ்கள் பெற்றுப் பயனடைய விரும்புகிறேன். தங்களின் நன்றி தெரிவித்த உறையிலிருந்து தூய்மைத் தமிழுக்கும், தெளிவான கருத்துகளுக்கும் கூடிவரும் நெஞ்சங்களை நினைத்துப் புதிய நம்பிக்கை பிறக்கிறது.

தங்களின் நெடும் பணி தொடர்ந்திட்ட மகிழ்ச்சியில் இம் மடலை முடிக்கிறேன். இப்படிக்கு, அன்புடன்,

—த. அருட்கையன், வல்சாது, குசராத் மாநிலம்.

---

## தாய்மொழிக் கல்வி!

O உருசியா, சப்பான், பிரஞ்சு நாடுகள் தங்கள் தாய் மொழிகளிலேயே கல்வி கற்பிக்கின்றன. அந் நாடுகளில் உள்ள மிகச் சிறந்த அறிவியலறிஞர்களுக்குக்கூட ஆங்கிலத்தில் A B C D கூடத் தெரியாது.

# ‘அச்சமில்லை அச்சமில்லை’ என்று ஆர்ப்பாட்டப் பாடல் பாடிய பாரதியார் வெள்ளையனிடம் வீழ்ந்து வணங்கினார்!

‘அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!’

—என்று பாரதியார் பாடிய பாடலை எடுத்துக் கூறி, அவரை பெரும் வீரர்போல் காட்டிப் பெருமை பேசுவர் பார்ப்பனர்களும், இந்தியத் தேசிய உணர்வுடையவர்களும்,

ஆனால் உண்மையில் பாரதியார் ஒரு கோழையினும் கோழை என்பதை அவருடைய வரலாற்றில் பல நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டும்.

இங்கு மாதிரிக்கு ஒரு செய்தி.

1918 இறுதியில் பாரதி வெள்ளைக்காரக் காவலர்களால் சிறைப்பிடிக்கப் பெற்றுக் கடலூர் சிறையில் வைக்கப்பெற்றிருந்தார். அக்கால் அவர், சென்னை வெள்ளைக்கார ஆளுநர்க்குத் தம்மை விடுதலை செய்யுமாறு வணங்கிக் கேட்டு எழுதிய ஒரு மடல் இங்குக் கீழே தரப்பெறுகிறது. அத்துடன் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் அடுத்துத் தரப்பெற்றிருக்கிறது.

பாரதியாரின் வீரம் பற்றி வாய்கிழியப் பேசும் தேசியப் பித்தலாட்டக்காரர்கள் இவற்றைப் பார்த்து, அவரின் வெள்ளைக்காரப் பற்றுண்மைக்கு நாணுவார்களாக.

இச் செய்தி ஏற்கனவே ‘விடுதலை’ ஞாயிறு மலரில் வெளிவந்துள்ளதேனும், அதன் அழுத்தப் பரவல் குறித்தும் அதனைப் பாராத அன்பர்கள் பார்க்கவும் மேலும் ஒரு முறை இங்கும் வெளியிடப் பெறுகிறது.

Om Sakthi

District Jail. Cuddalorc.
28 November 1918.

To,
His Excellency Lord Pentland
Governor, Fort St. George, Madras.

The Humble petition of C. Subramania Bharati.

May it Please your excellency,

It is more than a week now since I was arrested at Cuddalore on my way from Pondicherry to Tinnevelly which is my native district. After many loyal assurances on my Part, as your Excellency may well remember, the

Dy I.G.(C I D.) was sent by your Excellency's Government a few months back, to interview me at Pondicherry. The D.I G. after being thoroughly satisfied with my attitude towards the Government asked me if I would be willing to be kept interned, purely as a war measure, in any two districts of the Madras Presidency, during the period of the war. I could not concent to that proposal, because having absolutely renounced politics I could see no reason why any restraint should be placed on my movements even while the war lasted. Subsequent to that also, I have addressed several petitions to your Excellency, clearing away all possible doubts about my position.

Now that the war is over and with such signal success to the Allies, I ventured to leave Pondichery, honestly believing that there would be no difficulty whatsoever in the way of my settling in British India as a peaceful citizen. Contrary to my expectations, however I have been detained and placed in the Cuddalore District Jail under conditions which I will not weary your Excellency by discribing here at any length but which are altogether disagreeable to a man of my birth and status and full of dangerous possiblities to my health.

I once again assure your Excellency that I have renounced every form of politics. I shall ever be loyal to the British Government and law abiding

I therefore beg of your Excellency to order my immediate release. May God grant your Excellency a long and happy life.

I beg to remain, Your Excellency's most obedient servant,

C. SUBRAMANIABHARATI.

(G.O.No. 1331 dt. 18-12-1918 Public.)

அரசாணை எண் 1331 பொதுத்துறை,நாள் 18-12-1918-இல் வெளியிடப் பெற்றுள்ள பாரதியாரின் கடிதம்:—

ஓம் சக்தி மாவட்டச்சிறை, கடலூர்;

பெறுநர்:— 28—11—1918;

மேன்மைமிகு தலைவர் (Lord) பென்ட்லாந்து அவர்கள்;
ஆளுநர், தூய ஜார்ஜ் கோட்டை, சென்னை:

சி: சுப்பிரமணிய பாரதியின் தாழ்மையான விண்ணப்பம்;
மேன்மைக்குரியவரே இவ் வேண்டுகை தங்களின் திருவுளத்தை சார்ப்பதாக;

புதுச்சேரியிலிருந்து என் சொந்த மாவட்டமான திருநெல்வேலிக்குச் சென்றுகொண்டிருந்தபொழுது நான் சிறைப்படுத்தப்பட்டு இப்பொழுது ஒரு கிழமைக்கு மேல் ஆகிறது. அரசப் பற்றுடன் (loyal) பல உறுதிகளை நான் அளித்திருந்தவை மேன்மைக்குரிய தங்களுக்கு நன்கு நினைவிலிருக்கும் என்றெண்ணுகிறேன். இதன் பிறகு மேன்மைக்குரிய தங்கள் அரசின் ஒற்றுத்துறை உயர் அலுவலர்(DY.I.G. C.I.D)சில மாதங்களுக்கு முன்பு புதுச்சேரிக்கு வந்து என்னை உசாவினர். அரசுடனை என் போக்கின் மீது முழு மன நிறைவுற்ற அவர், போர் நடக்கும் பொழுது முற்றிலும் ஒரு போர்க்கால நடவடிக்கையாக நான் சென்னை மாநிலத்தின் (Madras presidency)ஏதேனும் இரு மாவட்டங்களில் பாதுகாப்புக் கட்டுப்பாட்டில் வைக்கப்படுவதை விரும்புகிறேனு என்று கேட்டார். இது முழுக்கவும் பின்வாங்கிற அரசியல் கொள்கையாக இருப்பதால் இத்திட்டத்திற்கு என்னுல் ஒப்புதல் அளிக்க முடியவில்லை. போர் நடந்தபொழுதுகூட என் நடமாட்டத்திற்குக் கட்டுப்பாடு செலுத்த ஒரு காரணியமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதற்குப் பிறகும்கூட என்னுடைய நிலைபாடு குறித்த எல்லா ஐயங்களையும் தெளிவுபடுத்தி மேன்மைக்குரிய தங்களுக்குப் பல வேண்டுகைகளை எழுதியிருக்கிறேன்.

இப்பொழுது போர் முடிந்து கூட்டணி(Ailies)நாடுகளுக்கு வெற்றி கிட்டியிருக்கிற இந்த நேரத்தில் பிரிட்டிசு இந்தியாவில் ஓர் அமைதியான குடிமகனுக என் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் சிக்கல் ஏதும் இருக்காது என்று உண்மையாக நம்பி புதுச்சேரியிலிருந்து துணிந்து புறப்பட்டேன். ஆனுல் என் எதிர்பார்ப்புகளுக்கு மாருக நான் தளைப்படுத்தப்பட்டுக் கடலூர் சிறையில் வைக்கப்பட்டுள்ளேன். இங்கு எனக்குள்ள கட்டுப்பாடுகளை விளக்கமாக எழுதி மேன்மைக்குரிய தங்களுக்கு சலிப்பூட்ட விருப்பமில்லை. ஆனுல் இக் கட்டுப்பாடுகள் என் பிறப்புக்கும் தகுதிக்கும் முழுக்க முழுக்க ஏற்றவையல்ல. இவை என் உடல் நலனுக்குப் பெரும் தீங்கு விளைவிப்பவை ஆகும்.

அரசியலின் எல்லா வடிவங்களையும் நான் துறந்து விட்டேன் என்று மாட்சிமை பொருந்திய தங்களுக்கு மீண்டும் உறுதி கூறுகிறேன். ஆங்கிலேய அரசுடன் எப்பொழுதுமே அரசப்பற்று (loyal) கொண்டிருப்பேன், அரசு சட்டத்திற்கு எப்பொழுதுமே கட்டுப்பட்டு நடப்பேன்.

ஆகவே என்னை உடனடியாக விடுதலை செய்யுமாறு மேன்மைக்குரிய தங்களை மிகவும் மன்றாடிக் கெஞ்சிப் (beg) பணிந்து கேட்டுக் கொள்கிறேன். கடவுள் மேன்மைக்குரிய தங்களுக்கு நீண்ட மகிழ்வான வாழ்க்கையை வழங்குவாராக.

இப்படிக்கு
மேன்மைக்குரிய தங்களின் மிக மிகக் (most)கீழ்ப்படிந்த பணியாளன்(Servant) (ஒப்பம்) சி. சுப்பிரமணியபாரதி.

# குருடர் காதல்!

## நாடக ஆக்கம்: அதியமான்

**(பாவலரேறு அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்)**

முன்னுரை: காமம் உலக உயிரினங்களுக்கு இயற்கை வழங்கிய, ஒரு கையூட்டில்லாத நன்கொடை: இப்போது கையூட்டிற்கு மறுபெயர் நன்கொடையாதலால் அப்படிக் குறிப்பிட்டுள்ளேன்; இயற்கை நல்கிய இந் நன்கொடை மண்ணுலக உயிரினங்கள் அழிந்துவிடாதபடி உருவாக்கத்தை ஆக்கிக்கொள்ள வழங்கப்பட்ட இயற்கையின் கொடைவளம். காமத்தைப் பலர் கண்டிப்பதுண்டு. அது பொல்லாத ஓர் உணர்வு எனவும் கூறி அதை ஒழிக்கக் கூறுவர். காமம் மட்டும் இல்லாதிருந்தால் உலகம் அழிந்து போவதுடன் அதில் ஒன்றுமே இராது.

இம் மண்ணுலகில் உயிரினங்கள் இல்லாது போயின், வெற்றுலகத்தால் என்ன பயன்? எனவே உலகமென்றொன்றிருக்க வேண்டுமானால், உயிரினங்கள் கட்டாயம் இருந்தாக வேண்டும், அதற்குக் காம உணர்ச்சிகள் மிக இன்றியமையாமையாகும்.

காம உணர்வு தோன்றிய பின்னரே காதல் தோன்றி மலர்கின்றது. அக்காதலால்தான் ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கிறார்கள். அன்பும் அறனும் வாழ்க்கையாகத் திகழ்கிறது. குமுகாயக் கட்டுத் திட்டங்கள் தோன்றிய பிறகு காதலையும் வெறுக்கும் ஒரு நிலை ஏற்பட்டு விட்டது: வாழ்க்கை நெறிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட கட்டுத்திட்டங்கள் காதலைத் தாக்கமடையச் செய்துவிட்டது. ஆனால் காதல் தூய்மையானது: அதற்கு ஆறறிவாளர்கள் எனக் கூறிக் கொள்ளும் மாந்தர்கள் களங்கம் கற்பித்துத் தூய்மையற்றதாக்கி விட்டனர்; பாவலரேறு அவர்கள் எழுதிய 'குருடர் காதல்' என்ற பாவியத்தில், காதலின் உணர்வுகளைத் தெளிவாகக் கூறி இருக்கிறார்கள்.

'கண்ணொடு கண்இணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில—என்பார் வள்ளுவர். இங்கு, கண்பார்வையற்ற இரு குருடர்களின் காதலில் கண்பார்வை இல்லாவிட்டாலும் வாய்ச்சொல்லால் காதலை வளர்க்கும் சிறப்பைத் தெளிவாகக் கூறுகிறார். இதில் பெற்றோரை இழந்த பெண் படுந் துன்பத்தைக் காட்சி மாற்றத்தில் தனியாகக் காட்டியிருக்கிறேன்.

ஐம்புலன்கள் வழி நுகரும் இன்பம் காமம்: ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வகையாக ஐம்புலன்களும் காதல் இன்பத்தில் ஈடுபடுகின்றன என்பதை இப்பாவியம் உணர்த்துகிறது. கண்பார்வையற்ற குருடர்கள், ஏனைய நாற்புலன்களாலும் காதலின்பத்தை நுகர்கிறார்கள். ஒருபுலன் குறைவால் காதலின் இன்பம் தடைப்படுவதில்லை என்பதை 'ஐம்புலனில் ஒன்று குறைந்தாலும் ஓயாத நாற்புலனும் தன்றன் துறைக்குத் தடை செய்து நிற்கவில்லை- முழுவுடலும் கண்ணாகி அன்னவனைக் கண்டாள்' என ஆசிரியர் கூறுகிறார். புறக்கண்ணில்லாவிட்டாலும்

அகக்கண்ணால் தன் காதலனைக் கண்டு மகிழ்கிறாள் ஒரு குருடி, இருவரும் காதல் வாழ்வில் ஈடுபடுகின்றனர். யாவற்றையும் இந் நாடகம் விளக்கும்.

காட்சி—1

உறுப்பினர்: குருடன்' குருடி.
இடம் : சாவடி
காலம்: இரவு.

குருடி: (வழக்கத்திற்கு மாறாகச் சாவடியில் வந்து ஒரு மூலைக்குப் போகும் வழியில் படுத்துக்கிடக்கிறாள்)

குருடன்: (வழக்கமாக அவ்விடம் வருகிறான், அவளை இடறு-கிறான்) அப்பா! எவன்டா மடையன் வாழைத்தண்டைக் கொண்டுவந்து இங்கு போட்டிருக்கிறான்.

குருடி: (வழக்கமாக அவனிங்கு வருவது தெரியாதவளாய்) ஏய்! யாரது? எப்படி மிதிக்கிறான் பாரு. ஏனய்யா கல்லாட்டமா நான் படுத்திருக்கிறேன். கண் தெரியவில்லையா? நான் தான் குருடி, நீயும் அப்படித்தானா?

குருடன்: அடேடே! நீ யார் இங்கு வந்திருக்கிறாய்? உன்னை மிதிக்க வேண்டுமென்று மிதிக்கவில்லையம்மா. எனக்குக் கண் தெரியாது. மிதித்துவிட்டேன்-

குருடி: ஓகோ. அப்படியா? எனக்கும் கண் தெரியாது. அதனால் தான் பேசிவிட்டேன்.

குருடன்: ஏம்மா! நாள்தோறும் நான் தங்கும் இந்தச் சாவடியின் மூலையில் நீ வந்து தங்கிவிட்டாயாக்கும், சரி. சரி. கொஞ்சம் நகர்ந்து படுத்துக் கொள், எனக்கு அந்த மூலையைக் கொடு. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே!

குருடி: சரி, ஐயா! உட்கார்ந்து மெதுவாகத் தடவித் தடவி உன் மூலையைக் கண்டு போய்ப் படுத்துக்கொள்.

குருடன்: (உட்கார்ந்து கண் தெரியாமல் அவளைத் தடவி) ஏம்மா கொஞ்சம் தள்ளிப் படுத்துக்கொள்ளேன்.

குருடி: முதலில் காலால் உதைத்தாய்; இப்போது கையால் தடவுகிறாய்! அயல் பெண்ணைத் தொடக்கூடாது ஐயா, தொடக் கூடாது தெரியுமா?

குருடன்: அடா நீ ஒன்னு; கண்ணு தெரிஞ்சா ஏன் உன்னைத் தடவுகிறேன். தெரியாமல் கை பட்டுவிட்டது சரி சரி சினந்து கொள்ளாதே.

குருடி: ஏனய்யா உன் கையில் என்ன வச்சிருக்கிறாய். என் உடலில் மின்சாரம் போல ஏதோ ஒன்று பாய்கிறது.

குருடன்: என் கையில் ஒன்றுமில்லை. வேண்டுமானால் தொட்டுப் பார். கொஞ்சம் தள்ளிக்கோ.

குருடி: நீ: சரியான ஆளு கொஞ்சம் கொஞ்சமா நெருங்குறே!

குருடன்: பார்வை இல்லே பாரு. நீ எங்கே படுத்திருக்கிறாய்? நான் எங்கே படுக்கவேண்டுமென்று தெரியாமல் உன்னைச் சுற்று கிறேன். அதனால் நீ அஞ்சவேண்டாம். (படுக்கிறான்) அப்பாடி படுத்துக்கொண்டேன்.

குருடி: ஏய்! கொஞ்சம் தள்ளிப்படு. பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருக்கக்கூடாது. தெரியுந்தானே!

குருடன்: ஆமா, ஆமா தெரியும்) நெருப்புப் பட்ட பஞ்சு மாதிரித் தான் என் உடலெல்லாம் எரியுது.

குருவி: பேச்சை வளர்க்காதே. வேறு மூலையில் போய்ப்படு.

குருடன்: என்ன குருடி? ஓண்ட வந்தபிடாரி ஊர் பிடாரியை விரட்டியது போல இருக்கு உன் பேச்சு.

குருடி: நீ மட்டும் என்ன? குருடன் இல்லேயோ? என்னைக் குருடி என்கிறாய். அது இருக்கட்டும். பேச்சை நிறுத்து.

குருடன்: உன்னைப் பார்க்க எனக்குக் கண்பார்வை இல்லே. அதனால் பேசுகிறேன்.

குருடி: கண் தெரியாவிட்டாலும் செயலில் சரியாய் இருப்பாய் போலே இருக்கு. சரி பேச்சை முடித்துக்கொள்.

குருடன்: ஏம்மா?

குருடி: (பேசவில்லை)

குருடன்: ஏம்மா உன்னைத்தானே!

குருடி: (பேசவில்லை)

குருடன்: அடா! பார்க்கத்தான் பார்வையில்லே. பேசவுமா வாயில்லே. ஏம்மா, உன்னோடு பேச ஆவல்.

குருடி: (பெருமூச்சு விடுகிறாள், உறக்கம் வர மறுக்கிறது. ஆனாலும் விடையில்லை)

குருடன்: என்னமா, சினமா?

குருடி: (பேசவில்லை, ஆனாலும் அவனுடையப் பேச்சைக்கேட்க செவியை மேல் நோக்கி ஒருபக்கம் சாய்ந்துப் படுத்துக் கொள்கிறாள்.)

குருடன்: (தனிமொழி) சரி நீ பேசமாட்டாய். ம். கண்கெட்டதாலல்லவோ பேச வேண்டியதிருக்கிறது. அல்லது கண்ணே பேசிக் கொள்கிறோம். உலகம் உருண்டையாம். எனக்கு எதுவும் தெரியாது. இருள் மட்டும் தெரியும், வெளிச்சம் தெரியாது. நடக்கத் தெரியும். ஆனா நடைபாதைத் தெரியவில்லே. உண்ணத் தெரிகிறது. உணவு என்ன வண்ணம் என்பது தெரியவில்லே. பேச்சுக் கேட்கிறது, பேசுவது யார், எப்படி இருக்கிறார் என்பது தெரியவில்லே. கண் இருக்கிறது, ஆனால் பார்வை தெரியவில்லையே!

குருடி: எனக்கும் அப்படித்தான்.

குருடன்: அப்பா! பேசிவிட்டாயா?

குருடி: உன்னோடு இல்லை என் நிலையைச் சொன்னேன். உலகம் என்று ஒன்று இருப்பதாய்க் கூறக்கேட்டிருக்கிறேன். ஆனு அந்தப் பாரில் உள்ள பொருள்கள் ஒன்றுந் தெரியாது. யார் யாரோ பேசுவது கேட்கிறது. ஆனல் பேசுபவர் எப்படி இருக்கிறார் என்பது தெரியாது. வீடு என்கிறார், காடு என்கிறார், மாடு, ஆடு என்றெல்லாம் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அவை கருப்பா சிவப்பா தெரியாது. மண்ணின் வண்ணமென்ன அறியேன். மக்கள் உருவமென்ன கண்டதில்லை. அன்னை தெரியாது; அப்பனும் தெரியாது. எனக்குப் பெயரிட்ட பெற்றோரே தெரியாது. மற்றவை எப்படித் தெரியும். கடவுள் என்னைக் குருடியாகப் படைத்துவிட்டான். அவனும் எங்கே இருக்கிறன் என்று தெரியவில்லை!

குருடன்: கண்ணுள்ளவனே இன்னும் கடவுளைப் பார்க்கவில்லை என்கிறன். உனக்கும் எனக்கும் எப்படித் தெரியும். சரி சரி எல்லாம் இருக்கட்டும். உன் கையை என் பக்கம் நீட்டு; தடவுகிறேன். (கையால் தொடுகிறன்)

குருடி: சீ! கையை எடு ஐயா. ஆளைப்பாரு, ஆளை.

(திரை)

காட்சி—2

உறுப்பினர்: குருடன், குருடி.
இடம்: அதே சாவடி
காலம்: விடியற்காலம்.

குருடி: என்னங்க! என் முன்னல்தானே இருக்கிறீர்?

குருடன்: ஆமாம், ஆமாம். உன் முன்னல்தான் இருக்கிறேன். உன் கையை நீட்டு; தொட்டுக் காட்டுகிறேன்.

குருடி: (கையை நீட்டுகிறள்.)

குருடன்: (கையைப் பிடித்து) தெரிகிறதா?

குருடி: அறிகிறேன். நானும் உங்கள் முன்னல்தான் இருக்கிறேன்.

குருடன்: ஏம்மா! விடிந்து விட்டதோ?

குருடி: ஆமாம்.

குருடன்: எப்படி அறிகிறய்?

குருடி: காற்று சலசலத்து வீசுகிறது. காக்கை கரைகிறது. ஆற்றுநீர் எடுக்கச் செல்லும் நங்கையரின் வளையல் ஓசை கேட்கிறது. அவர்கள் பேசுவதும் கேட்கிறது. சிறுவர்கள் எழுப்பும் பேரொளியும் கேட்பதால் விடிந்துவிட்டது என அறிந்துகொண்டேன். அதனல் சொல்லுகிறேன். கதிரவன் ஒளியும் சுடுகிறது.

குருடன்: (நகர்ந்து அவள் பக்கம் சென்று அவள் கையைத் தடவி) உன் பெயரென்னவோ?

குருடி: செல்லி; உங்கள் பெயர்?

குருடன்: (அவளுடைய முன் கையைத் தடவி) முத்து.

குருடி: பெயரைக் கேட்டால் முத்தச் சொல்லுகிறீர்!

குருடன்: என் பெயர் முத்தன். சுருக்கமா முத்து என்றேன்.

குருடி: ஓகோ! பெயரா! என்ன, கை மேலே வருகிறது.

குருடன்: கையைத் தொட்டால் கன்னம் சிவக்குமென்பார். உன் கன்னத்தைப் பார்க்கப் பார்வையில்லை. அதனால் ஒரு சுவையை நுகருகிறேன். எவ்வளவு ஞன்பமாக இருக்கிறது. தெரியுமா?

குருடி: ஏங்க, விடிந்து விட்டது. வெளிச்சம் நமக்குத்தெரியாது; ஆனால் ஊராருக்குத் தெரியும். குருடும் குருடும் காதல் செய்வதைப் பார் என்று பார்த்தவர்கள் பேசுவார்களே. எனக்கும் நாணமாக இருக்கிறது. கொஞ்சம் தள்ளி இருங்கள்.

குருடன்: காதலைப் பற்றி யறியாதவரே நம்மைப் பார்த்து எள்ளுவர். ஏன் தெரியுமா? இப்போதெல்லாம் எவனோ எவளையோ திடுதிப்பென்று திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். பின்னரே காதல் செய்து கொள்ளுகிறார்கள். முழுக் காதல் சுவை அவர்களுக்குத் தெரியாது. முதல் இரவென்று காமத்தைச் சுவைப்பார்களே யன்றிக் காதலையறியார். அதனால் எவரும் எள்ளுவர் என்பதை எண்ணி வருந்தவில்லை. எவர்க்கும் அஞ்சவில்லை. எனக்கோ வீடோ, காடோ, மனையோ, மாடோ, ஆடோ ஒன்றுமில்லை, உன்னிடத்தில் எதையும் கேட்டுக் கொண்டுவா எனக் கூறப்போவதுமில்லை. நாம் இருவரும் தனியாட்சியாளர். மக்கள் மீது அன்பற்றோர் ஆட்சி போல நம்முடைய ஆட்சி இருக்காது. கேள். நம்முடைய ஆட்சி அன்பு ஆட்சி; அதனால் நல்ல ஆட்சி. நீ, பேரரசி, நான் பேரரசன். (தழுவுகிறான்)

குருடி: (சிரித்து) வாழ்க்கையைப் பற்றிப் பட்டறிவு உண்டோ?

குருடன்: சிந்திப்பவனுக்குப் பட்டறிவு போன்று சொல்லும் திறமுண்டு. நான் இரந்துண்ணும் ஓர் இரவலன்தான். சில மாந்த முண்டங்களைப் போன்று உண்ணுவதும் உறங்கிச் சோம்பித் திரிவதும் என் பழக்கமில்லை. பக்கத்தில் உள்ளவன் நிலை என்ன? அவன் உயர என்ன வழி என்றுகூடச் சிந்திப்பேன். ஆட்சியாளர் கூட எப்போதும் தன் நலத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பர். நான் பொதுநலத்தையும் சிந்திக்கிறேன்.

குருடி: பொதுநலமா? அஃது என்ன?

(தொடரும்)

# செய்திகள்

(குறிப்பு: ஆசிரியர் சென்ற ஆண்டு 27-1-93 அன்று 'தடா'ச் சட்டத்தில் தளைப்படுத்தப் பெற்றுத் தொடர்ந்து ஏழு மாதங்கள் சிறையிருந்ததால், அதற்கு முன் நடந்த நிகழ்வுகளைப் பற்றிய சில செய்திகளும், அவர் 26-8-93-இல் விடுதலையானதற்குப் பின்னைய செய்திகளுடன், அன்பர்கள் பார்வைக்கு இணைத்துத் தரப்பெறுகின்றன. வாசகர்களும் செய்தியுள் அடங்கியவர்களும் காலத் தாழ்வைப் பொருட்படுத்த வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.)

## 1. தமிழீழ ஒருங்கிணைப்புக்குழு—கருத்தரங்கம் !

சென்ற 28-5-92 அன்று மாலை, சென்னை, வன்னியர் தேனும்பேட்டை, 'தினப்புரட்சி' அலுவலக அறையில் தமிழீழ ஒருங்கிணைப்புக் குழுவின் நடைமுறை ஆய்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. பண்ணுருட்டி இராமச்சந்திரன் (ச.ம.உ.) தலைமை தாங்கினார். பழ. நெடுமாறன், பெருஞ்சித்திரனார், மயிலாடுதுறை இராமதாசு, மணியரசன், தண்டபாணியர். வெங்காலூர் குணா, வழக்கறிஞர் கலைமணி, நகைமுகன், குரு. இதயமணி, பேரா. அரசேந்திரன், தியாகு, மா. பூங்குன்றன், மா. பொழில் முதலியோர் கலந்து கொண்டு, கருத்துரையாற்றினர்.

## 2. தமிழ்மன்னன்—அருள்மொழி வாழ்க!

கடந்த தி.பி. 2023, ஆடவைத் திங்கள் 7-ஆம் நாள் (21-6-92) அன்று, காலை 7 மணியளவில், சேயாறு வட்டம், மாத்தூர் மங்கலபுரம் ஆசிரியப் பெருமக்களும் அடிநாள் முதல் இந்நாள் வரை குடும்ப அளவிலேயே துணைத் தூண்களாக உள்ளவர்களும் நம் இயக்க முன்னோடிகளும் ஆகிய திருவாளர்கள் மா. செ. தமிழ்மணி — நாகம்மையார் இணையர் அவர்களின் திருமகளார் செல்வி. த. அருள்மொழிக்கும், உத்திரமேரூர் வட்டம், அழகுசெய்யூர், திருவாளர்கள் தருமன்—முனியம்மாள் இணையர் அவர்களின் திருமகனார் செல்வன் த. தமிழ்மன்னன் அவர்களுக்கும், அழகு செய்யூர் மணமகன் இல்லத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது. திரு. அ. அப்துல்அமீது அவர்களின் வரவேற்புரைக்கும், திருமண நிகழ்விற்கும் பின்னர், திருவாளர்கள் திருக்குறள்மணி, புலவர் இறைக்குருவனார், புலவர் குமரன் தன்னொளியான், புலவர். எ. மாணிக்கம், ந. சு. மணி, வெ. முனிகிருட்டிணன், அ.சி. நடராசன், மு. சண்முகம், செ. செல்வராசன், இரா. நாகன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினார்கள். திருமணி உத்திரமேரூர் நன்றி கூறினார்.

### 3. கோ.சிவா — உலோ.மலர்வண்ணன் — வாழ்க!

சென்ற 11-9-92—ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 7-30 மணியளவில்; காஞ்சிபுரம், காமராசர் வீதி முசுகுபலிஜகுல திருமண மண்டபத்தில், காலஞ்சென்ற கோவிந்தராசன் மகள் கோ. சிவா-வுக்கும், மாணம்பதி காலம் சென்ற உலகநாதன் மகன் மலர்வண்ணன் அவர்களுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் நிகழ்ந்தேறியது, க. அருணாசலம் வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள். கே.பி. சானகிராமன், இரா. நாகன், நீல. கார்த்திகேயன், சு. நடராசன் மா.செ. தமிழ்மணி, க. வெ. நெடுஞ்சேரன், வை.பழநி, இரா. ஏகமூர்த்தி, பெருமாள் முதலியோர் மணமக்களை வாழ்த்தி உரைத்தனர். இறுதியில் த. பரசுராமன் நன்றியுரையாற்றினார்.

### 4. தமிழர் வாழ்வுரிமை மாநாடு:

கடந்த செப்டம்பர் 92, 10,11,12-ஆம் பக்கல்களில் சென்னை, பெரியார் திடலில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் தமிழர் வாழ்வுரிமை மாநாடு மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அந்த மாநாட்டின் நோக்கங்கள் தெளிவாகக் கீழ்வருமாறு வலியுறுத்தப் பெற்றன;

பறிபோகும் தமிழர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு முதலிய பண்பாட்டு உறவுகளைப் பாதுகாக்கவும், இந்தியா வெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள புதுப் புதுச் சிக்கல்களைப் புரிந்துகொண்டு தீர்வு காணவும், உலகின் பிற நாடுகளில் வாழும் உலகத் தமிழர்களுக்காக உரிமைக்குரல் கொடுக்கவும் அந்த மாநாடு நடைபெறுவதாக அறிக்கைகள் கூறின. மேலும்,

ஃ தமிழ்த் தேசிய இனத்தின் தன்னுரிமையை வென்றெடுக்கவும், கல்வி, அறமன்றம், ஆளுமை அனைத்திலும் தமிழையே ஆட்சிமொழி ஆக்கவும்,

ஃ வல்லாளுமை(ஆதிக்க) மொழிகளாம் இந்தி, ஆங்கிலம், சமசுக்கிருதம் ஆகியவற்றை விரட்டியடிக்கவும்,

ஃ பார்ப்பன—முதலாளிய, இந்தி ஆளுமை நடுவணரசை அம்பலப்படுத்தவும்,

ஃ சாதி வேற்றுமைகளைக் களைந்து குமுக நெறி பெறவும்,

ஃ பெண்ணடிமைத்தனத்தை ஒழித்துப் பெண் விடுதலை பெறவும்,

ஃ இட ஒதுக்கீட்டில் மக்கள் தொகை அடிப்படையில் குமுக ஞாயம் பெறவும்,

ஃ மண்டல் பரிந்துரையை வென்றெடுக்கவும்,

ஃ கல்வி, வேலைவாய்ப்புகளில் தனியார், பொதுத்துறை, அரசு ஆகிய அனைத்துத் துறைகளிலும் அனைவருக்கும் உரிய பங்கு கிடைத்திடவும்,

ஃ காவிரியில் தமிழ்நாட்டுக்குரிய பங்குத் தண்ணீரைப் பெறவும்,

ஃ காவிரிப் படுகைக் கன்னெய்க்கும், நெய்வேலி நிலக்கரிக்கும் உரிமைத் தொகை பெறவும்,

ஃ சேதுக் கடல் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாக்கவும்,

ஃ சேலம் உருட்டாலையை உருக்காலையாக மாற்றவும்,

ஃ கேரளாவில் மேற்கில் பாய்ந்து கடலில் வீணாகக் கலக்கும் பம்பை முதலிய ஆறுகளின் நீரைக் கிழக்கே திருப்பித் தமிழகத்தின் தென்மாவட்டங்களைச் செழிக்கச் செய்யவும்,

ஃ கிருட்டிணா, கோதாவரி, காவிரி, பாலாறு ஆகிய தென்னிந்திய ஆறுகளை இணைக்க வற்புறுத்தவும்,

ஃ 1953-க்குப் பிறகு (மொழிவழி மாநிலமாகப் பிரிக்கப்பட்டபிறகு) தமிழ்நாட்டில் குடியேறிய யாரும் இங்குச் சொத்து வாங்குவதைத் தடுத்து நிறுத்தவும்,

ஃ செயங்கொண்டம், மன்னார்குடி நிலக்கரிச் சுரங்கங்களைத் தமிழ்நாடு அரசே தமிழர்களின் முதலீட்டைக் கொண்டு நடத்த நடுவணரசை வற்புறுத்தவும்,

ஃ சென்னை—கன்னியாகுமரி கடற்கரை நெடுஞ்சாலைத் திட்டத்தை நிறைவேற்றவும்,

ஃ உதகமண்டிலத்தில் வண்ணப்படச்சுருள் தொழிற்சாலை அமைப்பதை வற்புறுத்தவும்,

ஃ திருக்குறளைத் தேசிய நூலாக்க வலியுறுத்தவும்,

ஃ வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களைத் தமிழக அரசே ஏற்று நடத்த வற்புறுத்தவும்,

ஃ மக்களைப் பிளவுபடுத்தி இந்தியை திணிக்கும் நவோதயாப் பள்ளிகளைத் தடுத்து நிறுத்தவும்,

ஃ வேறுபாடுகளை வளர்த்து நாட்டைப் பின்னடையச் செய்யும் வேத ஆகமக் கல்லூரி தொடங்குவதை எதிர்த்து முறியடிக்கவும்,

ஃ உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கிடப் போராடவும்,

ஃ தமிழ்நாட்டு விளைபொருள்களுக்கு உழவர்களே விலையை உறுதி செய்யும் உரிமையைப் பெறவும்,

ஃ தமிழ்நாட்டு மக்களின் செல்வம் வடநாட்டு முதலாளிகளால் கடனுதவி என்ற பெயரில் ஞாயமற்ற வட்டியாகச் சுரண்டப்படும் கொடுமைகளை எதிர்த்திடவும்,

ஃ இலங்கைக்கு இலவயமாகத் தூக்கிக் கொடுத்த, தமிழ்நாட்டுக்குரிய கச்சத்தீவை மீட்டெடுக்கவும்,

ஃ நெய்பவனுக்கே தறி சொந்தமாகக் குரல் கொடுக்கவும்.

ஃ புழங்கு பொருள், உணவுப் பொருள் விலையேற்றங்களைக் கட்டுப்படுத்தவும், விலையுயர்வைக் குறைக்கவும்—நடுவண் மாநில அரசுகளை வற்புறுத்தவும்.

ஃ அரிசி, மண்ணெய், சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருள்கள் அடித்தள மக்களுக்குத் தங்குதடையின்றித் தாராளமாய்க் கிடைக்க வழி வகுக்கவும்,

ஃ நிலவரி உயர்வை நீக்கம் செய்ய வலியுறுத்திடவும்.

ஃ வறட்சி—வெள்ளத் தாக்கமுறும் உழவர்களின் கடன்களை நீக்கம் செய்யவும்.

ஃ கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை முறைகேடில்லாமல் டத்திடவும்.

ஃ காவல் நிலையக் கொலைகளைத் தடுத்து நிறுத்தவும்.

ஃ அடக்குமுறைச் சட்டங்களை விரட்டியடிக்கவும்.

ஃ பிற மாநிலங்களில் தமிழர்கள் கணிசமாக வாழும் பகுதிகளில் அந்தந்த மாநிலங்களின் மொழியுடன் தமிழையும் ஆட்சி அலுவலக நடைமுறைகளில் கையாள வற்புறுத்தவும்.

ஃ பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் விழுக்காட்டிற்கேற்ப அந்தந்த மாநிலங்களின் கல்வி, வேலைவாய்ப்புகளில் ஒதுக்கீட்டைப் பெற்றுத் தரவும்.

ஃ இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரந்து வாழும் தமிழ் மக்களின் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பாடநூல்களை ஆக்கி அனுப்பத் தமிழக அரசை வற்புறுத்தவும்.

ஃ இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கவும்,

ஃ ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க இங்குள்ள தமிழர்களை ஓரணியில் திரட்டவும்,

ஃ ஈழத் தமிழர்களின் பிள்ளைகளுக்குத் தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் முந்தைய அரசுகள் வழங்கிய ஒதுக்கீட்டை இன்றைய அரசும் வழங்க வற்புறுத்தவும்,

ஃ கட்டாயப்படுத்தி ஈழத் தமிழ் ஏதிலி(அகதி)களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நினைக்கும் மாநில அரசின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தவும்,

ஃ தமிழீழ விடுதலையை ஏற்பிசைவு(அங்கீகாரம்)செய்யவும்.

ஃ விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை நடுவண் அரசு நீக்கம் செய்ய வற்புறுத்தவும்,

ஃ உலகை அச்சுறுத்தும் அணு உலையைத் தமிழகத்தில் அமைக்கத் திட்டமிடும் நடுவண் அரசின் போக்கைக் கண்டிக்கவும்.

ஃ சமத்துவ—சமவுடைமைக் குழுகம் அமைக்கவும் அம் மாநாடு நடத்தப் பெற்றதாக அறிவிப்புச் செய்தபடி அம் மாநாட்டின் உரைப் பொழிவுகள், தீர்மானங்கள் முதலியன இருந்தன;

அம் மாநாட்டில், மருத்துவர் ச.இராமதாசு(நிறுவனர் பா.ம.க.), கி.ஆ.பெ. பண்ணுருட்டி இராமச்சந்திரன், பேரா. தீரன் (தலைவர் பா.ம.க.), நெல்லிக்குப்பம் கிருட்டிணமூர்த்தி (பா.ம.உ.), தலித் இரா. ஏழுமலை (பொ. செ. பா. ம. க.) பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரா. சாலை இளந்திரையன், பேரா. சாலினி இளந்திரையன், பாவலர் இன்குலாப், வெங்காலூர் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் பி.ஆர்.குப்புசாமி, தியாகு, சங்கமித்ரா, பிரபஞ்சன், முனைவர் கே.ஏ. குணசேகரன் முதலிய நூற்றுக்கணக்கான அறிஞர்களும் தலைமைப்பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர். மூன்றும் நாள் இரவு வெங்காலூர் தன்னுரிமை மனமகிழ் மன்றத்தினரின் 'பாவேந்தர் கண்ட தமிழச்சி' நாடகமும், அன்று மாலை தேனிசை செல்லப்பாவின் இசைப் போர் நிகழ்ச்சியும் நடைபெற்றன;

மூன்றும்நாள் மாலை மாண்புமிகு வி. பி. சிங், கியானி ஜெயில்சிங், கி.கன்ஷிராம், வீரமணி, சிம்ரத்சிங்மான், கிவாஜி-கணேசன், குன்றக்குடி அடிகளார், பழ.நெடுமாறன், திருநாவுக்கரசு, பழனிபாபா, சேப்பன், சுப.வீரபாண்டியன், தியாகு, வி. டி. இராசசேகர், பெ. மணியரசன், பெரியார்தாசன் முதலியோர் கலந்துகொண்ட பொது மாநாடு, பேரா. தீரன் தலைமையில் நடந்தது. மருத்துவர் ச. இராமதாசு நிறைவுரையாற்றினார்.

## 5. வி. செல்வம்—ஜெர்லின் பாத்திமா வாழ்க!

சென்ற 1993, நவம்பர் முதல்நாள் திங்களன்று,மாலை 6 மணி அளவில்,ஆசிரியர் 'தடா'ச் சிறையினின்று வெளிவந்த பின்னர் அமைந்த முதல் நிகழ்ச்சியாக, அய்யப்பன் தாங்கலில் உள்ள 'இலக்குமி திருமண மாளிகை'யில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஜியார்ஜ்—தெரேசா இணையரின் மகளும் புரட்சிகர இளைஞர் முன்னணி உறுப்பினருமாகிய 'உஷா'என்னும் செல்வி ஜெர்லின்பாத்திமாவுக்கும்,பேரூர் வடிவேலு—சரோசா அம்மாள் இணையரின் திருமகனும், புரட்சிகர இளைஞர் முன்னணி உறுப்பினரும் ஆகிய இராபர்ட் என்னும் செல்வத்திற்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில், தமிழ்த் திருமணம் நிகழ்ந்தேறியது. இதில் மக்கள் உரிமைக் கழகத் தலைவரும் உயர்நெறிமன்ற வழக்கறிஞரும் ஆகிய பொ.வெ. பக்தவத்சலம் அவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தலைவர் முன்னுரை, வாழ்த்துரை நிறைவுரைக்குப் பின்னர் இனிய பல்சுவை விருந்துடன் மண விழா நிறைவு பெற்றது;

## 6. ‘ஈழத்தமிழகம்’ — ‘புதுமனை புகுவிழா! சென்னை-64.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2024, நளித்திங்கள் (கார்த்திகை). நான்காம் நாள்(19.11.93) வெள்ளி காலை 6 மணியளவில், கிறித்துவக் கல்லூரிப் பேராசிரியர் கு. இராசேந்திரன்—இரா.யாழினி இணையர் (மதிப்பிற்குரிய தமிழீழ விடுதலைப் பேராளர் திரு. ஈழவேந்தன் அவர்களின் மருமகனும் மகளும்) சென்னை-64, சிட்லப்பாக்கம், அண்ணாநகர், பெருஞ்சித்திரனார் தெருவில் கட்டுவித்து, 'ஈழத் தமிழகம்' என்று பெயர் தாங்கிய, 19-ஆம் எண்ணுள்ள புதுமனை புகுவிழாவைத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்களும் உ.த.மு.க. நிறுவனர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும் நிகழ்த்தி வைத்தனர்.

விழாவில் ஈழவிடுதலைப் பாவலர் திரு. காசிஆனந்தன் அவர்களும், தமிழின விடுதலை இசைஞர் தேனிசை செல்லப்பா குழுவினரும் உட்படப் பேராசிரியர்கள், தமிழீழம், தமிழகம் சார்ந்த அறிஞர்கள், இன விடுதலை உணர்வாளர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தலைவர்கள் வாழ்த்துரைக்குப் பின்னர் இன்சுவை விருந்து பரிமாறப் பெற்றதுடன் விழா நிறைவு பெற்றது.

விழாவின் நினைவாகப் பேராசிரியர் கு. இராசேந்திரன் அவர்கள் ‘தென்மொழி’ வளர்ச்சிக்கென உரு. ஐநூறு அன்பளிப்பாக வழங்கி அவரின் தூய தமிழ், தமிழினப் பற்றுகளை மெய்ப்பித்து உறுதிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 7. மெய்ப்பொருள் பேரறிஞர் செகந்நாதன் அவர்களின் முதலாண்டு நினைவு நிகழ்ச்சி—சென்னை-20.

சென்ற 19-11-93 அன்று சென்னை 20, இந்திரா நகர், 22-ஆவது குறுக்குத் தெரு, வீட்டு எண் எல்.7-இன் மாடியில், மாலை 6 மணியளவில், மறைந்த மெய்ப்பொருள் பேரறிஞரும் சென்னை, ‘அன்னையர் கழக’த் தலைவர், பேராசிரியை சரசுவதி அவர்களின் தமையனாரும் ஆகிய, செகந்நாதன் அவர்களின் முதலாம் நினைவு நிகழ்ச்சியைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி பேரா. சரசுவதி அவர்களின் கணவரும், ‘விடுதலை’ நாளிதழ் துணையாசிரியருமாகிய இராசேந்திரன் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதன் பின் நிகழ்ந்த தலைவரின் விளக்கமான தலைமையுரைக்குப் பின்னர், விழா நாயகரை நினைவுகூர்ந்து முனைவர் இரா. இளவரசு, மா. செ. தமிழ்மணி, பாவலர் கவி. பூங்குன்றன், சவகர், ஈழவேந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் பேரா. சரசுவதி அவர்கள் நன்றி கூறித் தம் தமையனாரின் அறிவுத் திறன்களையும், அன்புணர்வுகளையும் நினைவு கூர்ந்தார். இறுதியில் நினைவுநாள் விருந்து அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. நிகழ்ச்சிக்கு தமிழீழ

அன்பர்கள், அறிஞர்கள். பல இயக்க அன்பர்கள் அனைவரும் பலரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**8. பஃறுளி இல்லத் திறப்பு விழா! சென்னை-103.**

சென்ற தி.பி. 2024, நளி 9 (24-11-93) அறிவன் கிழமை காலை 10 மணியளவில், சென்னை-103, மணலி புதுநகர், 270, குடியிருப்புப்பகுதி' சிலம்புத் தெருவிலுள்ள 135/17 எண்ணுள்ள 'பஃறுளி இல்ல'த்தைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் திறந்து வைத்துப் புதுமனை புகுவிழாவை நடத்தினர். நிகழ்ச்சிக்கு வீட்டின் உரிமையாளரும், அசோக் இலேலண்டு பைந்தமிழ்ப் பாசறையின் பொருளாளரும் ஆகிய சி. அறிவுடைநம்பி அனைவரையும் வரவேற்றார். பைந்தமிழ்ப் பாசறையின் செயலாளர் துரை.தென்னவன் தலைமை ஏற்றார். திருக்குறள்மணி, புலவர் இறைக்குருவனார், க.அன்புக்குமார் ஆகியோரின் வாழ்த்துரைக்குப் பின்னர் பாவலரேறு அவர்கள் சிறப்புரையாற்றுகையில் பஃறுளிக் குடும்பத்தினரை வாழ்த்தி நல்லுரை வழங்கினார். இறுதியில் திருவாட்டி சீ. உமா அறிவுடைநம்பி நன்றியுரைக்குப் பின்னர் இல்லத்தினரால் இனிய பகல் விருந்து படைக்கப் பெற்றதுடன் விழா நிறைவு பெற்றது.

**9. தமிழ்ச் சாதிகள் ஒற்றுமை மாநாடு—திருப்பூர்.**

கடந்த 28-11-93 அன்று, திருப்பூர், காவேரியம்மன் திருமண மண்டபத்தில் பிற்பகல் 3 மணி அளவில் தொடங்கித் தமிழ்ச் குமுகாய ஒற்றுமைப்பாட்டுக்கு வழி கோலும் 'தமிழ்ச் சாதிகள் ஒற்றுமை மாநாடு' திராவிடத் தமிழர் கழகச் சார்பில் நடைபெற்றது. மாநாடு தொடங்குவதற்கு முன்னர் தமிழின எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா குழுவினரின் இன எழுச்சிப் பாடல்கள் இசைக்கப் பெற்றன.

மாநாட்டிற்குத் தீரர் இரா. திருமறவன் தலைமைத் தாங்கினார். திருப்பூர் மு.சிவா வரவேற்புரை நல்கினார். பேரா. சாலையார், மூவர் சாலினியார், மயிலாடுதுறை தி.இராமதாசு, புலவர் நா.இளமாறன், தமிழ் முகிலன், சாத்திரி வெங்கட்ராமன், பாவலர் மாரியப்பன், இரகுபதி முதலியோர் உரையாற்றினர்.

மாநாட்டில் கலந்துகொள்பவர்களாக அறிவிக்கப் பெற்ற முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன், பிரபஞ்சன், வலம்புரிஜான், திருமாவளவன், ஈழவேந்தன், கோவைசெழியன், பால பிரஜாபதி அடிகளார் முதலியோர் ஏனோ மாநாட்டிற்கு வரவில்லை.

இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இரண்டு மணி நேரம், திராவிடத் தமிழர் என்று கூறுவது தவறு என்றும், தமிழினம் எவ்வாறு திராவிட இனமாக மாற்றி அழைக்கப் பெற்றது என்றும், அதனால் என்னென்ன தவறுகளும் கேடுகளும் நிகழ்ந்தன என்றும் விரிவாக விளக்கமாக உரையாற்றினார்.

அதன் பின்னர் திராவிடத் தமிழர் கழக அமைப்பாளர் திரு.க. நகைமுகன் அவர்கள் மாநாட்டுத் தீர்மானங்களைப் படித்து விளக்கினார். மாநாடு ஏறத்தாழ இரவு 11 மணி அளவில் நிறைவு பெற்றது.

## 10. இலக்கிய விழா, பெங்களூர்-21.

சென்ற தி.பி. 2024 சிலை, 4-ஆம் நாள் (19-12-93) அன்று காலை 10 மணியளவில், பெங்களூர் 21, தயானந்த நகர், சத்யா பள்ளியில், உலகத் தமிழ்க் கழகம், திருவள்ளுவர் சங்கம் இணைந்து நடத்திய இலக்கிய விழா, க.வேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஒளிமலரவன் மொழிப்பண் பாட, புலவர். கி.சு. இளங்கோவன் வரவேற்புரையாற்றினார். திருவள்ளுவர் சங்கம் ஆற்றிவரும் தமிழ்ப் பணிகள் குறித்து, அதன் தலைவர் புலவர். அ.ம. குழந்தைமான் அவர்களும், உ.த.க. ஆற்றிவரும் தமிழ்ப் பணிகள்குறித்து ஒளிமலரவன் அவர்களும் உரையாற்றிய பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'திருக்குறளும் மெய்ப்பொருளும்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். விழாவின் இறுதி நிகழ்ச்சியாக அமெரிக்க நாடு சென்று திரும்பிய ஆசிரியர் ப. திருநாவுக்கரசு அவர்களுக்குப் பாபு, சீ.பூ. மணி இருவரும் பாராட்டுரைகள் வழங்கினர். இறுதியில் பெங்களூர் உ.த.க. அமைப்பாளர் க.அரசு நன்றியுரைக்குப் பின் விழா நிறைவு பெற்றது.

## 11. பெங்களூர் தமிழ்ச் சங்கம்—இலக்கிய நிகழ்ச்சி:

சென்ற 19—12—93 ஞாயிறு மாலை 6-30 மணியளவில் பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. ஆ.சி. விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடக்கத்தில் திரு. பொற்செழியன் அவர்கள் மொழிப்பண் பாடிட, தலைவர் வரவேற்புரையும் தலைமையுரையும் நிகழ்த்தினார். அடுத்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'செந்தமிழும் மெய்யறிவும்' எனும் தலைப்பில் ஏறத்தாழ இரண்டுமணி நேரம், தமிழ்மொழியின் அமைப்பும் அதிலுள்ள மெய்யறிவு நோக்கும், தமிழியல் மரபில் சான்றோர்கள் கொண்ட மெய்யறிவுக் கூறுகளும், திருக்குறளில் காணப்பெறும் மெய்யறிவுக் கருத்துகளும் வாழ்வியலுக்கு மெய்யறிவு எத்துணை இன்றியமையாதது—என்பனபற்றியெல்லாம் மிக விரிவாகவும் விளக்கமாகவும் சிறப்புரையாற்றினார். இறுதியில் சங்கச் செயலாளர் திரு. பொற்செழியன் அவர்களின் இனிய நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

---

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எளிதாக அவிழ்த்து விட்டிருக்க மாட்டார். இத்தகைய உரைகளை நாடக பாணியில் பேசுவது, செயலலிதாவை வானளாவப் பாராட்டிப் புகழ்ந்தே வாழ்வு நடத்தி வரும் அவருடைய துணை அமைச்சர்களுக்கே கைவந்த கலைமலி கடைச்சரக்காகும். அவ்வாறு தங்கள் நினைவு தப்பி ஒரு காலகட்டத்தில் பேசியவர்களும் அவர்மேல் கட்டுக்கட்டாய்க் குற்றச் சாட்டுகளையும் ஊழல் மூட்டைகளையும் ஆளுநர், நடுவணரசு முன்பும் அவிழ்த்துக் கொட்டிக் கொண்டிருப்பதையும் நம் பொதுச்செயலாளர் அவர்கள் அறியாதவரல்லர்.

பொருளீட்டத்திற்குக் கல்வித்துறையையும் ஒரு பெரும் முதலீடாக ஆக்கி வரும் காலம் இதுவாகும். ஆனால், 'சமூக நீதி' என்பது வெறும் கல்வியாலும், பொருள் பெருக்கத்தாலும் மட்டுமே மீட்கப்பட்டுவிடுவதோ, நிலைத்து விடுவதோ இல்லை. பெரும் பெரும் குமுகவியல் போராட்டங்களாலும் தலைகீழ்ப் புரட்சிகளாலும் கனிய வைக்கும் நிலைப்பாடாகும். அது சட்டங்களாலும் வெறும் கவர்ச்சியான கற்பனைத் திட்டங்களாலும் செயல்படுத்தக் கூடியதன்று. அது அவ்வாறு, அவ்வளவு எளிதில் பொதுச்செயலாளர் செயலலிதா வழியாக எதிர்பார்க்கும் குமுகாய மாற்றங்கள் நிகழ்வதானால், அதற்குப் புதுப்புதுச் சட்டங்கள் தேவையில்லை; துணிந்த செயற்பாடுகளே தேவை. இன்றுள்ள ஏட்டுச் சுரைக்காய்ச் சட்டங்களைச் செயற்படுத்தினாலேயே, நாம் எதிர்பார்க்கும் பாதிக் குமுகியல் மாற்றங்கள் ஏற்பட்டு விடும். ஆனால், சட்டப் பேரறிஞராகவுள்ள நம் வீரமணியவர்களைவிட முதலமைச்சர் இவ்விளைவு நிலைகளையெல்லாம் நன்கு உணர்ந்தவர் என்பதை நாம் நன்குணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

பார்ப்பனர்கள் எப்பொழுதுமே நூறாண்டுகளுக்கு அப்பாற்பட்ட பார்வையுடையவர்கள். அதற்குச் செயலலிதா ஒன்றும் இளைத்தவரல்லர். அவரைப் பற்றியும் அவர் நடவடிக்கைகளைப் பற்றியும் அவர் அரசியலுக்கு வராத முன்பே, கலைஞர் அவரைப் பற்றி 'ஏனோ தானோ'வென்றிருந்தபொழுதே, அவரை 'ஆரிய மாரீஷை' என்று எழுதி, அவரிடம் கலைஞர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று 'தென்மொழி' எடுத்துக் கூறியுள்ளது. 'தமிழ்நில'த்திலும் இதுபற்றி அறிவுறுத்தியுள்ளோம். அதன் பின்னரும் கலைஞர் அவர் நடவடிக்கைகள் பற்றிப் புறக்கணிப்பாக இருந்த விளைவால்தான், இன்று அவர் அறிவாலயத்தில் முன்னால் முதல்வராக ஆட்சி செலுத்த வேண்டியுள்ளது. இனி, அவர் செயலலிதாவை அரசியல் களத்தில் அப்புறப்படுத்தி விட்டு, அதிகாரக் கோட்டையைக் கைப்பற்றுவதென்பது அவரின் இந்தப் பிறவி முழுவதும் நடவாத ஒரு செய்தியாகும். அதற்காக நாம் கழிவிரக்கப்படுவதைத் தவிர வேறு கழுவாய் ஏதுமில்லை. இதை உறுதியாய்த் தெரிந்து கொண்டுதானோ என்னவோ, நம் அன்புக்குரிய வீரமணி அவர்கள், 'செயலலிதா ஆட்சிக்கு

என்றென்றும் நாங்கள் உறுதுணையாய் இருப்போம்' என்றும், 'அவர்க்கு எவ்வளவு பெரிய இடத்திலிருந்து எதிர்ப்பு ஏற்படுமானாலும், அதனைத் தம் தற்கொலைப்பட்டாளம் முறியடித்து ஆட்சியைக் காப்பாற்றும்' என்றும் வெட்ட வெளிச்சமாகக் கூறியிருக்கின்றார்; எவ்வளவு பெரிய இடம் என்பது நரசிம்மஇராவை விடக் கலைஞர்க்கே மிகவும் பொருந்துவதன்றோ?

தகுதியிருந்தால் பாராட்ட வேண்டியதுதான்! ஆனால் வீரமணி அவர்கள் இதுவரை எந்த முதலமைச்சரையும், ஏன், ம.கோ. இரா.வைக் கூட எதற்காகவும் இவ்வாறு பட்டம் கொடுத்துப் பாராட்டியதில்லை. இன்னும் சொல்வதானால் கலைஞரைக் கூட இவ்வளவில் பாராட்டிடவில்லை. அவர்கள் இனத்திற்காக ஒன்று கூடவா செய்ததில்லை? தமிழினத்திற்குத் தொழில்துறையிலும் கல்வித்துறையிலும் மிகுநலம் செய்த பச்சைத் தமிழர் காமராசைத் தந்தை பெரியார் கூட இவ்வளவில் பாராட்டிவிடவில்லை என்பது எல்லாருக்கும் தெரியுமே; முதலமைச்சர் என்ற அளவுக்குப் பாராட்டினாலும், செயலலிதா என்ற அளவில் பாராட்டுவது, நம் தன்மானத்திற்கே இழுக்கும் தலைக்குனிவும் ஆகாதா? இனி, அந்த அளவுக்குச் செயலலிதா பாராட்டுப் பெற அப்படி என்னதான் செய்துவிட்டார்? 69 விழுக்காட்டு இடஒதுக்கீடும், 50 விழுக்காடு பெண்களுக்குச் சமவுரிமை தருவது' என்பதும் இன்னும் நடைமுறைக்கு வந்துவிடாத திட்டங்கள்தாமே! அவை நடைமுறைக்கு வருவது என்பதைக் காலத்தால் அன்றோ மதிப்பிட முடியும்?

இன்னொன்றை இவ்விடத்தில் நாம் கூறிக்கொள்ளவேண்டும்; இதுவரை எந்தத் தனிப்பட்ட பார்ப்பனராலும் தமிழினத்திற்கு (வீரமணி அவர்கள் கூறிய 'சமூகம்' என்பது தமிழினத்தைத்தான் குறிக்கும் என்றால்) நன்மை கிடைத்தது இல்லை; தமிழ்மொழிக்கு அவர்கள் ஓரிருவர் நன்மை செய்திருக்கலாம். அதேபோல் தமிழிலக்கியத்திற்கும் ஓரிரு பார்ப்பனரால் நன்மை கிடைத்திருக்கலாம்; அதற்குக் காரணம், அவர்களும் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொள்வதற்காகவும். தமிழ்மொழியைச் சமசுக்கிருதத்திற்கு வழிமொழி என்று காட்டுவதற்காகவுமே ஆகும்; இஃது அவர்களின் வாழ்வியலுக்குத் தேவையாகும் ஒருவகைப் பிழைப்பு உத்தியாகும்; இனி, இவ்வாறே தமிழ்நாட்டிற்கும் அவர்கள் உதவியிருக்கலாம்; இதுவும் அவர்கள் அரசியல் நிலைப்பாட்டுக்காகவே இருக்கும். ஆனால் பார்ப்பனர்கள் தமிழினத்திற்கு, வீரமணி அவர்களின் மொழியில் கூறுவதானால் 'சமூக நீதிக்கு' உதவியதாக எந்த ஒரு வரலாறும் இல்லை. இந்த வரலாற்று அடிப்படையில், செயலலிதா அவர்களின் திட்டங்களையும், சட்டங்களையும், செயற்பாடுகளையும் கூறி எதிர்கால நிகழ்வுறுதிக்குப் பின்னர்தாம் நாம் மதிப்பீடு செய்ய வேண்டுமே தவிர, சொற்கள் வாயிலுள்ளபொழுதே அல்லது எழுத்து வடிவில் உள்ள நிலையிலேயே அவற்றிற்கு உயிர்

கொடுத்து மகிழ்ந்து பேசிவிடக் கூடாது என்பதே நமது கருத்தாகும்.

கடைகொட்கச் செய்தக்க(து)ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும் (663)

என்று திருவள்ளுவர் தரும் எச்சரிக்கையை நாம் உணர்ந்து பார்ப்பதே அறிவுடைமையாகும்.

இனி, 'ஊமையன் பேச்சுக்கு உளறுவாயன் பாராட்டுத் தெரிவித்தது போல்', செல்வி செயலலிதா அவர்கள் 'எத்தனையோ பாராட்டு விழாக்களை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால், இதுவரை நான் சந்தித்த பாராட்டு விழாக்களிலேயே என் நெஞ்சைக் கொள்ளை கொண்டது. இந்த இனிமையான பாராட்டு விழா தான். ஆயிரம் கோடி கொடுத்தாலும் இந்தப் பெருமை எவருக்கும் கிடைக்குமா' என்று பேசி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். அத்துடன், 'உங்கள் பாராட்டு மொழிகளை, உங்கள் வாழ்த்துகளை என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரிய பேறாகக் கருதுகிறேன்...தந்தை பெரியார் விட்டுச் சென்ற பணிகளை, ஒரு சமுதாயக் கடமை உணர்வோடு சிறப்புற ஆற்றிக் கொண்டிருக்கும் 'சகோதரர்' திரு. வீரமணி அவர்கள் ஒரு செயல் வீரர். தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்ட ஒருகொள்கை வீரர். தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதைத் தமது உயிர்மூச்சாகக் கொண்டு, உடல் நலிவு ஏற்பட்டாலும், உள்ள உறுதி குறையாமல், சமுதாயத் தொண்டாற்றி வரும் சகோதரர் திரு. வீரமணி அவர்கள் நமது அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்' என்று நம் பொதுச்செயலாளர் அவர்களை மனம் குளிரப் பாராட்டியுள்ளார். ('விடுதலை', சென்னை 12-3-94).

இங்குதான் நாம் தந்தை பெரியார் கருத்தை நினைவு கூர வேண்டும். 'பார்ப்பனர் ஒருவர் நம்மைப் பாராட்டுகிறார் என்றால், தாம் நம் செயற்பாடுகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; அவர் நம்மைக் குறைகூறிப் பேசுகிறார் என்றால், நாம் சரியான பாதையில் சென்று கொண்டுள்ளதாகப் பொருள் கொள்ள வேண்டும்' என்னும் பட்டறிவு சான்ற அறிவுரை அது. இதைப் பற்றி நாம் என்ன கருதுவது!

இனி, இறுதியாக நம் மதிப்பிற்குரிய (!) முதலமைச்சர் செயலலிதா அண்மையில் விடுத்த அரசுக் கட்டளை ஒன்றை நாம் மிகுந்த மனப் பதற்றத்தோடு கவனிக்க வேண்டும். தமிழினத்தையும் தமிழ்நாட்டையும் சீர்குலைக்கும் செயற்பாடு, இது. செயலலிதா தமிழினத்தின் மெலிவுக்கு எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதை இதன் வழியாக நாம் நன்கு மதிப்பிட முடியும்.

"தமிழ்நாட்டிலுள்ள மொழிச் சிறுபான்மையரின் தற்காப்புக்காக, தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க பகுதிகளில் உள்ள மொழிச் சிறுபான்மையினரின் தாய்மொழிகளை அவ்வப் பகுதியின் அலுவலக மொழிகளாக, வழங்க ஏற்கனவே

உள்ள அரசுக் கட்டளையை மறு ஆய்வு செய்துமாற்றிப் புதிதாகக் கட்டளை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பகுதிகளில் 1981 கணக்குப்படி ஆங்காங்குள்ள மக்கள் தொகையில் 15 விழுக்காட்டிற்கும் அதற்கு மேலும் வாழ்கின்ற, தமிழ்மொழியைத் தவிர வேறு சிறுபான்மை மொழிகள் பேசும் மக்களுக்காக அவர்தம் மொழிகளை அலுவல் (ஆட்சி) மொழிகளாக்கிப் புதுக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், தெலுங்கு மொழியை அலுவலக மொழியாகப் பின்வரும் வட்டங்களில் பயன்படுத்துவதற்கு, அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்க்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. திருத்தணி, திருவள்ளுவர், பொன்னேரி, கும்மிடிபூண்டி, ஊத்துக்கோட்டை துணைவட்டம், பள்ளிப்பட்டி—துணைவட்டம் (அனைத்தும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ளன), அரக்கோணம் (நகராட்சி), குடியேற்றம் வட்டம், குடியேற்றம் நகராட்சி (தெலுங்கும் உருதும்) (அனைத்தும் வடவார்க்காடு அம்பேத்கார் மாவட்டம்), இராசபாளையம், நகராட்சி, சாத்தூர், அருப்புக்கோட்டை, விருதுநகர் வட்டங்கள் (காமராசர் மாவட்டம்), கொடைக்கானல், பழனி வட்டங்கள் (திண்டுக்கல் அண்ணா மாவட்டம்), போடி நகராட்சி, திருமங்கலம், பெரியகுளம் வட்டங்கள் (மதுரை மாவட்டம்), தேன்கனிக் கோட்டை, ஒசூர் வட்டங்கள் (தருமபுரி மாவட்டம்);

தெலுங்கு மொழியை அலுவலகச் செயல்களுக்குப் பயன்படுத்துவது பின்வரும் பகுதிகளுக்கும் அறிவிக்கப்பெறுகிறது. கோயம்புத்தூர் பெருநகராட்சி உள்ளடங்கிய கோயம்புத்தூர் வட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி உள்ளடங்கிய உடுமலைப் பேட்டை வட்டம், பல்லடம், அவநாசி, பொள்ளாச்சி, மேட்டுப் பாளையம் வட்டங்கள் (மேட்டுப்பாளைய வட்டத்தில் தெலுங்கு மொழியுடன் கன்னட மொழியும் அலுவலக மொழியாக அறிவிக்கப் பெறுகிறது) பெரியார் மாவட்டத்தில் உள்ள கோபி செட்டிபாளையம், பெருந்துறை, சத்தியமங்கலம் பகுதிகளிலும்—தெலுங்கு மொழியை அலுவலக ஆட்சிமொழியாக அறிவிக்கப் பெறுகிறது. சத்திய மங்கலம் வட்டத்தில் மட்டும் தெலுங்கு மொழியுடன் கன்னட மொழியும் அலுவலக ஆட்சி மொழியாக அறிவிக்கப் பெற்றுள்ளது.

இனி, மலையாள மொழியை அலுவலகச் செயல்களுக்குப் பயன்படுத்துவதும் பின்வரும் பகுதிகளில் அறிவிக்கப் பெற்றுள்ளது. அவை, பத்மநாபபுரம், குழித்துறை நகராட்சி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளங்கோடு வட்டம்—ஆகியன.

(இந்தியன் எக்சுபிரசு, மதுரை, 26 2-94)

பார்த்தீர்களா, செல்வி செயலலிதாவின் செயற்பாட்டை. 'ஆரியர் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பர்' என்னும் பழமொழி எத்துணை மெய்யாக ஆகிவிட்டது என்பதை. மானமிகு வீரமணி அவர்கள் பாராட்டிய 'சமூக நீதி காத்த வீராங்கனை' தமிழினத்தின் மொழிக்கும் இனத்திற்கும் எவ்வளவு ஆழமான

குழிகளை வெட்டியிருக்கிறார் என்பதை. இவர் இங்கு அறிவித்ததைப் போல், கேரளத்தில், ஆந்திராவில், கருநாடகத்தில், மராட்டியத்தில், ஏன் தில்லியில் தமிழர்கள் மிகுதியாக வாழும் பிற மாநிலப் பகுதிகளில் தமிழ் மொழியையும் அலுவலக ஆட்சி மொழியாக அறிவிப்பார்களா, அவ்வம் மாநிலத்தவர்கள் என்பதற்கு முதலமைச்சர் செயலலிதா அவர்கள் விடை கூறியே ஆக வேண்டும். தமிழர்கள் அங்கெல்லாம் போய் வாழ்வதற்கே வக்கற்ற நிலையிலும், அவர்கள் கொலையுண்டும், கொள்ளையுண்டும், கற்பழிக்கப்பட்டும் நாடோடிகளாக, ஏதிலிகளாக இருக்கின்ற சொத்து, நலன்களை இழந்து இத்தாய்த் தமிழகத்திற்கு ஓடோடி வருகின்ற நிலையில், அவை பற்றியெல்லாம் கவலைப்படாமல், 'அகதிகள் முகாம்' என்ற பெயரில் நீலிக் கண்ணீர் வடித்த செயலலிதா, கடைத் தேங்காயை எடுத்து வழிப் புள்ளையார்க்கு உடைத்ததைப் போல்' அண்டை அயல்மாநிலத்தவர்கள் இங்குத் தாராளமாய் வந்து புகுந்து மண்ணைகப்படுத்தி வளமான வாழ்க்கை வாழ்ந்து வருவதுமன்றி, இங்குள்ள மண்ணின் மைந்தர்களையும் அவர்கள் தாய்த் தமிழாகிய மாநில மொழியையும் சிறுபான்மை ஆக்கிச் சீரழியும்படி இத்தகைய கரவான கட்டளை பிறப்பித்திருக்கிறாரே இவரா 'சமூக நீதி" காக்கிறவர்? காத்தவர்? எண்ணிப் பார்க்க வேண்டாவா, நம் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய வீரமணியவர்கள்? இங்குள்ள தமிழும் தமிழர்களும் சிறிது சிறிதாக அழிந்து போய், நம் வீரமணியும் அவரது கழகமும் மட்டும் வாழ்ந்திருந்தால் போதும் என்று அவர் கருதுகின்றாரா, என்பதை அனைவரும் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

இவ்வரசுக் கட்டளை பற்றி விளக்கம் கேட்டு எழுதிய திரு. நகைமுகன் அவர்களுக்கு, அரசின் தலைமைச் செயலகத்திலிருந்து, இவ்வரசாணை ஏற்கனவே—1961-இலிருந்து நடைமுறையில் உள்ளதுதானென்றும், மேலும் அது 1965, 1981-ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கப் பெற்றுள்ளதென்றும், இஃது இந்திய அமைப்பியல் சட்டங்கள் 29, 30, 350-B(2) பிரிவுகளின் அடிப்படைகளைக் கொண்டதுதான் என்றும் விடை கூறப்பெற்றது. அவ்வமைப்பியல் சட்டப் பிரிவுகளும் 1961, 1965, 1981-ஆம் ஆண்டுகளின் மாநில அரசுக் கட்டளைகளும் சிறுபான்மை மொழியினரின் கல்வி, காப்புரிமை பற்றியே பெரும்பாலும் உரைக்கின்றன.

இந் நிலையில் தாம் இந்த அரசு கடந்த 29-12-93—இல் விடுத்த ஆணையில் மட்டுந்தான் இவ் வலுவல்— ஆட்சிமொழித் தொடர்பாக இவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் அச் சிறுபான்மை மொழிகளுக்குச் சலுகைகள் தரப் பெற்றுள்ளன. மேலும், இவ்வகை நடைமுறை அரசுச் செயலகம் கூறுவதுபோல் வேறு மாநிலங்களிலும் நடைமுறையில் உள்ளதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருப்பினும் அஃது ஒரு கண்துடைப்பே, அஃது உண்மையானால், பம்பாய், கருநாடகம், ஆந்திரம், கேரளம்,

கல்கத்தா தில்லி முதலிய பகுதிகளிலிருந்து தமிழர்கள் ஏன் அடிக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும், கற்பழிக்கப்பட்டும், சொத்துகள் பிடுங்கப்பட்டும் தங்கள் தாய்த் தமிழகத்திற்கு ஏதிலிகளாக ஓடி வரவேண்டும்? எனவே அரசு அமைவு கூறுவது வெறும் சூழ்ச்சியே!

இனி, அவர் செயலலிதாவைப் பட்டம் கொடுத்துப் பாராட்டியுள்ளதைப் பற்றிச் சிலர் எதிர்த்தும் கண்டித்தும் கருத்துத் தெரிவித்ததைப் பற்றி நம் பொதுச் செயலாளர் அவர்கள் ஒரு கண்டன அறிக்கை கொடுத்துள்ளார். அது 'விடுதலை' நாளேட்டில் (சென்னை 17-3 94-இல்) வெளிவந்துள்ளது. அவ்வறிக்கையில் திரு.வீரமணி அவர்கள் பயன்படுத்திய சில கடுமையான சொற்களுக்காக நாம் மிகவும் வருந்துகிறோம். 'இந்து' நாளிதழ் 'ஈ.வே.இராமசாமி நாய்க்கர்' என்று முதலிலும் 'ஈ.வே.இராமசாமி' என்று இடைக்காலத்திலும் எழுதி வந்ததை விட்டு விட்டு இப்பொழுது 'தந்தை பெரியார்' என்று எழுதியது என்பதை அதன் 'மனமாற்றம்' என்று மெச்சிக் கொள்ளுபவர், தாம் செல்விக்குப் பட்டம் கொடுத்துப் பாராட்டியதைக் கண்டிக்கும் தோழர்களை மட்டும் ஏன் சாடுதல் வேண்டும்? அவர்கள் தந்தை பெரியார் கற்பித்த கொள்கையில் வீரமணி அவர்களை விட வலிவாகவும் விழிப்பாகவும் உள்ளார்கள் என்று மனம் உவந்து பாராட்டாமற் போனாலும், வெகுண்டு, தாழ்வான சொற்களைப் பயன்படுத்தி ஏன் இழித்தும் பழித்தும் பேச வேண்டும்? அவ்வறிக்கையில் அவரிடம் காணப்பெறுவது கொள்கைச் செருக்கா, மனச் செருக்கா என்பதை ஒருமுறை அவர்கள் எண்ணிப் பார்ப்பது அவர்க்கும் நல்லது; கழகத்திற்கும் நல்லது. அவர் அதில் பயன்படுத்திய சொற்களும் தொடர்களும் இவை: 'அவதூறு சேறுகளை அலட்சியப் படுத்துவீர்' என்பது அவ்வறிக்கையின் தலைப்பு; இதில் 'அவதூறுகளை அலட்சியப் படுத்துவீர்' என்னும் தொடரே தம் கருத்தைப் பண்பாட்டுடன் உணர்த்துகிறபொழுது 'சேறுகள்' என்னும் சொல் அவர் போலும் தலைமையும் வழிகாட்டுதலும் கொண்ட ஒருவர்க்குத் தேவைதானா? அதுவும் நம்மவர்கள்மேல் அச் சொல் பயன்படுத்தப் படவேண்டுமா? அவர் பயன்படுத்திய பிற புண்படுத்தும் சொற்கள் வருமாறு:

'சில அரசியல்வாதிகளும் அரை வேக்காடுகளும் நம்மைக் குறை கூறுவது பற்றி தமக்குக் கிஞ்சித்தும் கவலை இல்லை'

'ஆனால், நுனிப்புல் மேய்வதுதானே படித்த பாமரர்களின் வழமையாக உள்ளது;

'அழுக்கு மனம் படைத்தோர் நம்மீது அவதூறு சேற்றை அள்ளித் தெளிப்பார்கள்; அதனை தாம் அலட்சியப்படுத்தும் அஞ்சா நெஞ்சங்கள்'

'வெள்ளம் போல் திரண்ட கருஞ்சட்டைக் கடமை வீரர்களின் உணர்வுக்கு முன், வெட்டிப் பேச்சு பேசுவோரின் வீண் வாதம் தவிடுபொடியாவது என்பது உறுதியிலும் உறுதி'

—என்றவாறெல்லாம், தாம் செயலிதாவிற்குப் பட்டம் கொடுத்ததைத் திறனாய்வு செய்தவர்களைச் சாடி எழுதுவது சரியா என்று கருதிப் பார்ப்பது நடுநிலையான பண்பாடாகும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறோம். பொது நிலைக்கு வந்தவர்களைப் பொது மக்கள் அனைவரும் கண்காணித்துக் கொண்டும் கவனித்துக் கொண்டுந்தாம் இருப்பர். அவர்களில் அனைவரையுமே நமக்கு மாறானவர்களாகவும் எதிரிகளாகவும் கருதிக் கொள்ளவோ, நம் செயலை ஆதரித்துப் பாராட்டுபவர்கள் அனைவருமே சரியானவர்களாகவும் நடுநிலையானவர்களாகவுமே இருப்பார்கள் என்று கருதிவிடவோ கூடாது என்பது பொதுச் செயலாளர் அவர்களுக்குத் தெரியாததன்று.

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. —957

பொதுத் தொண்டுக்கு வந்து உயர்ந்து விளங்குபவர்கள் வானத்தில் உள்ள நிலவைப் போல் அனைவர் பார்வைக்கும் உரியவர்கள். அவர்களின் ஒவ்வொரு செயலையும் மக்கள் அனைவருமே கண்காணித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அதனால் அவர்களின் தவறுகள், குற்றங்கள் அந்த நிலவில் உள்ள மறுவை—இருளைப்—போல் அவர்களின் பார்வைக்கும் அதன்வழி திறனாய்வுக்கும் உரியனவாகவே இருக்கும். ஆனால், அத் திறனாய்வே கூடாதென்றோ, அது பற்றி நாம் கவலைப்படவே கூடாதென்றோ நாம் எண்ணிவிடக்கூடாது. அவற்றுக்கெல்லாம் விடை கூறத் தேவையில்லையென்றும் கருதிவிடக் கூடாது. அவ்வாறு விடை கூறும் பொழுது மன அமைவுடனும், நமக்குரிய பண்புடனுந்தாம் விடை கூறுதல் வேண்டும். அதுதான் பொதுப்பண்புக்குரிய செயல். அதுவன்றி, இப்பொழுதுள்ள அரசியல்காரர்களை போல் அடாவடித்தனமாகவும், எள்ளலாகவும் விடைகூறுதல், நம்மேல் மக்களுக்குள்ள நம்பிக்கையை இழக்கும்படியாகவே செய்துவிடும் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்; நாம் பிறர்க்குப் பயன்படுத்திய—கூறி விளக்கிய— அளவுகோலையே, நம்மை அளக்கவும் மக்கள் பயன்படுத்துவார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே நம்மைச் சுட்டிப் பிறர் கூறும் குற்றம் குறைகளுக்கு, நாம் மிகவும் பண்புடனும் அன்புடனும் விடை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று எண்ணுவதே அறிவுடைமையாகும். நாம் கூறும் விடையில், விளக்கத்தில் உண்மையும் நேர்மையும் உறுதிப்பாடும், ஞாயமும் இருப்பதாகக் குற்றம் கூறுபவர்கள் எண்ண வேண்டுமே தவிர புறக்கணிப்பும் (அலட்சியமும்), அகங்காரமும், அறிவுச் செருக்கும், சொற்-

சிலம்பமும் உண்மை மறைப்பும் இருப்பனவாக அவர்கள் கருதி விடக் கூடாது. இனி இவை எல்லாவற்றிக்கும் மேலாக நம் எதிர் விடையில் கனிவும் கண்ணியமும் பொதுமையும் பண்புணர்வும் கட்டாயம் கலந்து விளங்கவேண்டும். பொதுத் தொண்டுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டவர்கள் இவ் வகையில் இயங்காமற் போனால், மக்கள், அறிஞர்கள் அவர்களை அப்புறப்படுத்தி விடுவார்கள், அயன்மைப்படுத்தி விடுவார்கள் என்பதற்குத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில், நம் கலைஞர் அவர்களின் நடைமுறைகளே என்றென்றும் எடுத்துக்காட்டாக நிற்கும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நாம் விடையாகக் கூறும் விளக்கங்களில் தாழ்வான, தவறான பண்புக்குறைவான ஒரு சொல்லும் இருத்தல் கூடாது— என்பது பற்றித் திருக்குறளில் ஏராளமான கருத்துகள் கூறப் பெற்றுள்ளன.

'ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்' —128

'நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை' —193

'நயன்சாரா நன்மையில் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து —194

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் —198

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு —389.

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை —579

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார் நட்பு ஆய்ந்து கொளல்— 795

இந்த வகையில் மதிப்புமிகு வீரமணி அவர்கள், தம் அறிக்கையில குறிப்பிட்டுள்ள கருத்தே 'தென்மொழி'க்கும் ஒப்புதலான கருத்தாகும். எனவே அக்கருத்தையே அவருக்கும் நாம் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

'பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டிக் கண்டிக்க வேண்டியவைகளைக் கண்டிப்பதே நமது அணுகுமுறை. அதை எந்தக் காலத்திலும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதவர்கள், நாம்!... எனவே, எவருடைய விமர்சனத்தையும் கண்டு நாம் நமக்குச் சரி என்று பட்ட செயலைச் செய்வதிலிருந்து பின்வாங்க வேண்டிய அவசியமில்லை''. (விடுதலை 17-3-94 சென்னை).

இறுதியாக ஒரு பின்குறிப்பு: அதே 'விடுதலை'யிதழில், பொதுச் செயலாளர் தம் அறிக்கைக்குச் சார்பாக வெளியிடப் பெற்றுள்ள மணியம்மையார் அவர்களின் சிந்தனை, தனிப்பட்ட ஒரு கட்சி சார்ந்ததே தவிர, தனிப்பட்ட ஓர் ஆளைச் சார்ந்தது அன்று, என்று உணர்க. ○

பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை-பாரதிதாசன். 'பூட்டிய இரும்புக் கதவு திறக்கப்பட்டது, சிறுத்தையே வெளியே வா ..எனச் செருக்குடன் அழைக்கின்றேன். தங்கள் அரும் பணி தொடரட்டும், வளரட்டும், ஓங்கட்டும்.

உங்கள் உடலைத்தான் சிறைசெய்ய இயலுமேயன்றி உங்கள் மொழி ஆர்வத்தை, தன்மான, தமிழினமான உணர்வு-களை எவராலும் சிறை வைக்க இயலுமோ? 'தடா'ச் சட்டத்தின் கீழ் சிறைக்குச் செல்ல வேண்டிய கயவர்கள் நிரம்பிய தமிழகத்-தில், தாங்கள் எமக்கெல்லாம், வழிகாட்டியாய், மொழி-ஞாயிறாய், ஒரே விடிவெள்ளியாய்த் திகழ்கிறீர்கள். தமிழகம் உரிமை அனைத்தும் பெற்றுத் தன்னாட்சி பெற உங்களது அருமை, சீரிய பணி தொடரட்டும்.

எதையும் தாங்கும் நெஞ்சம் கொண்ட அரிமா, தங்களை நேரில் காண மிக ஆர்வம் கொண்டுள்ளேன். மடல் விடுத்து, தங்கள் அன்புறு இசைவு பெற்று வர விழைகிறேன்.

மேலும், தங்களது அருமை - பெருமை மிகு, 'திருக்குறள் மெய்ப் பொருளுரை''யைக் காணவும்,படித்துப் படித்துப் பெரும் பயனைப் பெறவும் ஆர்வம் கொண்டுள்ளேன். அதற்குரியதை அனுப்பி வைத்துள்ளேன்.

தங்கள் பன்னலனும் பல்வளனும் பல்லாண்டு வாழ்வும் 'தமிழகம்' பெற்ற—பெரும் பொன்னான வாய்ப்பு எனில், அது மிகைப்படக் கூறியதாகாது. இன்னணம் என்றும் அன்புடன்,

நா. உமாபதி, காரைக்குடி.

O : 1555: பாவலரேறு அய்யா அவர்களுக்கு எந்நாளும் தங்கள் நலம் நாடும் தமிழன்பன் பட்டாபிராமன் எழுதியது. வணக்கம். இன்று தென்மொழி வந்தவுடன் படித்தேன். மிகச்சிறந்த எச்சரிக்கை. இன்றுள்ள தமிழர்தம் உண்மை நிலை அறிந்து உளம் நொந்து கொண்டேன். 'தென்மொழி' இதழ் படித்து முடிந்ததும் அடுத்த இதழ் எப்போது வரும் வருமென ஏமுறும் உளத்தன். தங்களைத் 'தடா'வில் தளைப்படுத்தியமை அறிந்து அனலிடைப் புழுவாய் நொந்தது என் மனம். என்னையறியாது கண்ணீர் மல்கியது. குறித்த நாளுக்குள் 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை' முதல் தொகுப்பிற்கு உருவாய் அனுப்ப இயலாத நிலையில் இருந்த யான் உடனடியாகத் 'தடா' வழக்குக் கொடையாக உருபா 50-ஐ அனுப்பி வைத்தேன்.

மேலும் திருவண்ணாமலையில் நடைபெற்ற புரட்சிகர இளைஞர் கலை இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தங்களின் தமிழ்ப் பணியையும் தங்களுக்குத் தமிழர் செய்யும் பிணியையும் எடுத்துப் பேசி, இந்நிலை நீடித்தால் என் வீடு எனக்கு உரிமையானது என்பதே 'தடா' குற்றமாகலாம். இதற்குக் காரணியம் 'தெங்கிளநீர் குலையினிலே தேரை நோய் பாய்வதைப் போல்'என்ற தங்களின் பாவடிகளை நினைவுபடுத்தி-னேன்.

இவையெல்லாம் கூறுவதற்குக் காரணியம் யாதெனில் தமிழ், தமிழினம் என உயிர் மூச்சாகக் கொண்டுள்ள மாபெரும் இமய-மான தங்களின் நினைவில் என் போன்ற தமிழர் தமிழினத்தில் எண்ணிலார் உள்ளோம் என்பதைப் பதிய வைத்திடவேயாகும்' அகலாது அணுகாது இருப்போர்களில் யானும் ஒருவன்.

—தங்கள் அன்பான, பி. பட்டாபிராமன் க.மு. (தமிழ்); க.மு(அரசியல்); கல்.மு. வேட்டவலம்.

O : 1556; தனிப்பெருந்தகை, பாவலரேறு ஐயா அவர்-களுக்கு வணக்கம்! வாழி, நீடூழி! தாங்கள் சிறையினின்று

மீண்டபின், வேறு பல தொல்லைகட்கு ஆட்பட்டிருக்கிறீர்கள் என்பதைத் தமிழ் 'நிலத்'தினால் அறிந்து வருந்துகிறேன்.

தமிழ் அறிஞருக்குத் தமிழ்நாடு செய்யும் கைம்மாறு இது தான். 'ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை'' என்னும் பொய்யாமொழி பொய்க்குமா? தமிழ் ஆய்ந்த தமிழன் ஆட்சியில் தங்களுக்கு உள்ளறுப்பு நடந்தது, இக் கால் கால்வாறல், முதுகடி! இதுவும் வரும்; இன்னும் வரும். இதனையுணரும் பலர், 'நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்" என்பதை அறியலாம்.

எந்தப் பொதுமாந்தன், 'காலத்தை வெல்லும் இலக்கிய மேதை'யை உணர்கிறான்? அவனுக்குக் கள்ளச் சாராயம், திரைப்-படப் பொழுதுபோக்கு ஆகிய தேவைகட்கு அரசியல் சிறு வட்டம் பெருவட்டங்கள் போதும்! யார் எப்பாடு பட்டால் என்ன! இந்நிலையில் என் போன்றவர் பல ஊர்களுக்கு ஒன்றி-ரண்டு; மனக் குமுறலைத் தீர்த்துத் கொள்ள! தமிழன் இப்படித் தான் வாழ்கிறான். மனம் அமைதி கொள்ள ஒரே சொல் 'அறம் வெல்லும்' என்பதுதான். தமிழன் இனமான உணர்வு பெற்றால் தான் அறம் வெல்லும்.

இவண், தங்களன்பின்,
வை. வீருண்டான், தாஞ்சூர்.

O : 1557; அன்பின் சுடரே! வணக்கம். நலமுடன் இல்லம் வந்து சேர்ந்தேன்.

...சுற்றிலோர் கூற்று: உறுதியிட்டு அறுதியுடன் உரைப்-பேன். தங்களின் " திருக்குறள் மெய்ப்பொருளுரை' வெளிவந்த பின், இதுகாறும் வெளிவந்த திருக்குறள் உரைகள் எல்லாம் உருத்தெரியாமல் மறைந்து போகும். பாவாணர் அவர்களுக்கு "மொழிஞாயிறு' என்று அடைமொழி கூறுதல் எப்படி உண்மை-யானதோ, பொருத்தமானதோ, திரு: அருளி அவர்களுக்கு "செஞ்சொற் கதிரவன்' என்று அடைமொழி கூறுதல் எப்படி உண்மையானதோ, பொருத்தமானதோ, அப்படித் தங்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரையும் கூட 'திருக்குறள் உரை ஞாயிறு' என்று அடைமொழி பெறுதல் உண்மையானது; பொருத்தமானது' ஏனெனில் ஒன்றிலிருந்து ஒன்று, மற்றொன்று. உலகியல், உயிரியல் நிலை இது.

அன்பு நிறை
— அருள்மணி, பெங்களூர்-21.

O : 1558: பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும், பெருமைக்கும் உரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம்.

அய்யா, நீண்ட நாட்களாகக் கடிதம் எழுதாமைக்கு என்னை மன்னிக்கவும். (ஏனெனில், அண்ணன் தங்களுக்கு அடிக்கடி மடல் எழுதுகிறார். அதிலேயே செய்திகள் குறிப்பிட்டு விடுகிறார். அதனால் யார் எழுதினாலும் ஒன்றுதான் என இருந்து விட்டேன்)

மற்றபடி, சிறையில் தங்களுடன் இருந்த நாள்கள் என் வாழ்வின் பொற்காலம் என்றே கருதுகிறேன். ஏனெனில், தங்க-ளிடம் நான் கற்றுக் கொண்டவை பல. உலகவியல், வாழ்வியல், ஒழுக்கவியல், அரசியல், மாந்தநேயம் இப்படிப் பலவற்றைப் பற்றியும் தாங்கள் எனக்குக் கற்றுத் தந்ததும், தங்கள் பிள்ளை போல் பார்த்துக் கொண்டதும், நேர்காணலுக்குச் சென்று வந்த-

(தொடர்ச்சி உள்ளே 15-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)